لا إله إلا الله محمد رسول الله

# நபி வழி

உண்மை இஸ்லாத்தின் கொள்கை விளக்க இதழ்





ஜனவரி - 2009 விலை ரூபாய் 7/-

# அல்லாஹ்வின் மேன்மை

## திருக்குர்ஆனிலிருந்து...

''அவனே அல்லாஹ்; அவனையன்றி வேறு வணக்கத்திற்குரியவன் இல்லை; அவன் மறைவானதையும், வெளிப்படையானதையும் அறிபவன் ஆவான். அவன் அளவற்ற அருளாளனும், மேன்மேலும் கருணை காட்டுபவனுமாவான்.

அவனே அல்லாஹ்; அவனைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு இல்லை. அவன் அரசன்; தூயவன்; சாந்தியின் பிறப்பிடம்; பாதுகாப்பு அளிப்பவன்; கண்காணிப்பவன்; வல்லவன்; உடைந்த உள்ளங்களை இணைப்பவன்; மிக மேலானவன். (அவனுக்கு)அவர்கள் வைக்கும் இணையிலிருந்தும் அல்லாஹ் தூயவன்.

அவனே அல்லாஹ்; படைப்போன்; ஆக்குவோன்; (எல்லாவற்றிற்கும் அவற்றின் நிலைக்கேற்ப) வடிவமைப்போன் ஆவான். மிகச் சிறந்த பண்பு(பெயர்)கள் அவனுக்கே உரியன. வானங்களிலும் பூமியிலுமுள்ளவையெல்லாம் அவனது தூய்மையினை எடுத்துரைக்கின்றன. அவன் வல்லவனும், நுண்ணறிவுள்ளவனுமாவான்''. *(திருக்குர்ஆன் 59:23-25)*

## நபிமொழியிலிருந்து...

ஹஸ்ரத் அப்துல்லாஹ் இப்னு உமர் தெரிவிக்கிறார்கள்: ''ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிம்பரில் நின்று உரையாற்றுகையில் 'வானங்கள் யாவும் சுருட்டப்பட்டு அவன் வலக்கையில் இருக்கும். அவர்கள் இணை வைப்பதிலிருந்து அவன் தூயவனும் மிக மேலானவனும் ஆவான்' என்ற திருவசனத்தை ஓதி கீழ்வருமாறு கூறினார்கள்: ''நான் சீர்திருத்தம் செய்வதில் முழு ஆற்றல் பெற்றவன்; நான் மிகப் பெரியவன்; நான் அரசன்; நான் மிக உயரியவன் என்று எல்லாம் வல்ல அல்லாஹ் தன் மகத்துவத்தை எடுத்துக் கூறுகிறான்.'' நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வசனங்களை அந்த மிம்பர் ஆடும் அளவிற்குத் திருப்பத் திரும்பக் கூறினார்கள். அவர்கள் மிம்பருடன் விழுந்து விடுவார்களோ என்று நாங்கள் கவலைப்பட்டோம்.'' *(முஸ்னத் அஹ்மது பின் ஹம்பல்)*

## இமாம் மஹ்தி (அலை) அவர்களின் நூலிலிருந்து...

''நமது சொர்க்கம் நமது இறைவனே! நமது பேரின்பங்கள் இறைவனிடத்தே உள்ளன. ஏனெனில் நாம் அவனைக் கண்டிருக்கிறோம். அழகனைத்தும் அவனிடத்திலே கண்டோம். இந்தச் செல்வம், உயிரைக் கொடுத்தேனும் பெறத்தக்கது. ஒருவன் தன்னை முற்றிலும் இழந்தாகிலும் பெறத்தக்கது இம் மாணிக்கம். இழப்பிற்குரியோரே! இந்த நீரூற்றின் பக்கம் விரைந்து வாருங்கள்; இது உங்கள் தாகத்தை தணிக்கும். இது உங்களைக் காக்கும் உயிர் ஊற்றாகும். நான் என்ன செய்வேன்? இந்த நற்செய்தியை உள்ளங்களில் எவ்வாறு உறையச் செய்வேன்? இதுதான் உங்கள் இறைவன் என்று மக்கள் கேட்கும் பொருட்டுத் தெருக்களிலே எந்த முரசு அறைவேன்? மக்கள் கேட்கும் பொருட்டு அவர்களின் காதுகள் திறக்க என்ன மருத்துவம் செய்வேன்? உண்மையிலேயே நீங்கள் இறைவனுக்குரியவர்களாக ஆகிவிட்டால், அந்த இறைவன் உங்களுக்கே உரியவன் என்பதை உறுதியாக உணர்ந்து கொள்ளுங்கள்.'' *(ருஹானி கஸாயின் தொகுதி 19:கிஷ்தி நூஹ் பக்கம் 21,22)*

## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின்

# தென்னிந்திய வருகை

### (12.12.2008 அன்றுஅவர்கள் ஆற்றிய ஜுமுஆ பேருரை)

நான் சென்ற இரண்டு ஜுமுஆ தொழுகைகளை இந்தியாவில் தொழவைத்தேன். ஒன்று தென்னிந்தியாவில் கேரளாவிலுள்ள கோழிக்கோடு என்ற நகரத்தில் தொழ வைத்தேன். இன்னொன்று தில்லியில் தொழ வைத்தேன். பிறகு சகோதரர்கள் அறிந்திருப்பது போன்று, சில நிலைமைகளின் காரணமாக நான் எனது சுற்றுப் பயணத்தை சுருக்கிக் கொண்டு திரும்பி வந்து விட்டேன்.

பொதுவாக நான் எனது சுற்றுப் பயணத்திலிருந்து திரும்பியவுடன் சுற்றுப் பயணம் மேற்கொண்ட நாடுகளைப் பற்றி அல்லது எனது சுற்றுப் பயணத்தின் நிலைமைகளைப் பற்றி குத்பாவில் குறிப்பிடுவதுண்டு. அந்த நிலைமைகளைக் கேட்கும் பழக்கம் உலகத்தில் அமர்ந்திருக்கின்ற அஹ்மதிகளுக்கும் ஏற்பட்டுவிட்டது. எந்த நாடுகளில் நான் சுற்றுப் பயணம் மேற்கொண்டேனோ அவர்களுக்கும் தம்மைப் பற்றி கொஞ்சம் கூறப்பட வேண்டும் என்ற ஆர்வம் இருக்கிறது.

நான் கேரளா சுற்றுப் பயணத்திலேயே இன்னும் சொல்லப்போனால் கோழிக்கோட்டில் இருக்கும் போதே அந்த நகரத்தின் முக்கியத்துவத்தையும், வரலாற்றின் அடிப்படையில் அந்த ஊர்களில் மார்க்கத்தின் முக்கியத்துவத்தையும் பற்றி சுருக்கமாக எடுத்துக் கூறியிருந்தேன். அவர்களுக்கு அவர்களின் பொறுப்புகளின் பக்கம் கவன மூட்டியிருந்தேன். அவர்களின் மனத்தூய்மை, நன்றியுடைமை பற்றியும் எடுத்துரைத்திருந்தேன். ஆயினும் எனது சுற்றுப்பயணத்தை சான்றாகக் கொண்டு, மேலும் சில விஷயங்களை சுருக்கமாக எடுத்துக் கூறுவேன் - இன்ஷா அல்லாஹ்.

கேரளா செல்வதற்கு முன்னரே, வழியில் மதராஸ் என முன்பு அழைக்கப்பட்டு வந்த சென்னையில் நாம் தங்கினோம். அங்கு தங்கியது சில மணிநேரங்கள்தான் என்றபோதிலும் அங்கு லஜ்னாவிற்கென சுருக்கமான நல்ல நிகழ்ச்சி நடந்தது. அதில் அவர்களின் பொறுப்புகள் குறித்து சுருக்கமாக நான் அவர்களுக்கு கவனமூட்டி விட்டேன். மேலும் அங்கு Saint Thomas Mount என்ற இடத்தில் நமது புதிய பள்ளிவாயில் ஒன்று கட்டப்பட்டுள்ளது. அதனை திறந்தேன். **சென்னை ஜமாஅத் சிறிய ஜமாஅத் ஆகும். மிகச் சிறியதும் அல்ல. சில நூறு அஹ்மதிகளைக் கொண்டதாகும். ஆனால் அல்லாஹ்வின் அருளினால் மனத் தூய்மையிலும், நன்றியுடைமையிலும் மிக வளர்ந்த ஜமாஅத் ஆகும்.** அல்லாஹ் தனது அருளால் MTA (Muslim TV Ahmadiyya International) எனும் இந்த மகத்தான அருளை வழங்கியிருக்கிறான். இது ஜமாஅத்தில் ஓர் ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும், கிலாஃபத்துடன் உள்ள தொடர்பையும் அள்ளி அள்ளி, வழங்கி நிரப்பியிருக்கிறது.

இந்த ஊர் காதியானிலிருந்து ஏறக்குறைய 2000 மைல் தொலைவில் உள்ளது. இங்குள்ள அஹ்மதிகளில் பலர் காதியானுக்கு ஒருமுறை கூட சென்றிருக்க மாட்டார்கள். ஆனால் அவர்கள் அனைவரின் பார்வையிலும் கிலாஃபத்திற்காக நன்றியுணர்வும், அவர்களுக்கென்று ஓர் ஒழுக்கமும்,ஜமாஅத்திற்கான கவுரவத்தை வெளிப்படுத்துதல், ஜமாஅத்துடன் தொடர்பு ஆகியவை மிக அதிகமாகக் காணப்பட்டன. அதற்கு ஒரு காரணம், பெரியவர்களின் தர்பிய்யத் ஆகும். ஏனெனில் இந்த ஊரில் பல பெரியயோர்கள் வாழ்ந்துள்ளனர். இரண்டாவது, நான் கூறியது போன்று MTA வின் பங்கும் உண்டு. நஸ்ம்கள், நஸ்ம்களை படிக்கும் முறைகள் ஆகியவை தற்போது முழுஉலகிலும் அது ஆப்பிரிக்காவாக இருந்தாலும், ஆசியாவாக இருந்தாலும், ஐரோப்பாவாக இருந்தாலும் ஒரே மாதிரியாகி விட்டன. இந்தத் தொடர்பும், ஒற்றுமையும் அல்லாஹ்வின் அருளினால் நாள்தோறும் வளர்ந்தோங்கி வருகின்றன.

நான் இந்த ஊரில் பெரியவர்களின் தர்பிய்யத்தைப் பற்றிக் குறிப்பிட்டேன். இது தொடர்பாக இன்னொன்றையும் கூறிக் கொள்கிறேன். **சென்னை நகரத்தில் அஹ்மதிய்யத் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் காலத்திலேயே பரவிவிட்டது.** ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் 16 சஹாபிகள் அங்கு வாழ்ந்தது பற்றி வரலாற்றில் குறிப்பு காணப்படுகிறது. அவர்களின் சந்ததிகள், தலைமுறைகள் அஹ்மதிய்யத்தில் நிலை பெற்றிருக்கின்றனர். மேலும், புது அஹ்மதிகளும் இருக்கின்றார்கள்.

Saint Thomas Mount என்ற இடத்தில் நான் நமது பள்ளிவாயில் கட்டப்பட்டிருப்பதைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தேன். அந்த இடத்திற்கும் மார்க்க அளவில் வரலாற்று சிறப்பு இருக்கிறது. இங்குள்ள கிறித்தவ வரலாற்றின்படி, ஹஸ்ரத் ஈசா (அலை) அவர்களின் சீடரான தோமையர் என்பவர் கி.பி. 52-ஆம் ஆண்டில் இங்கு வந்தார். கேரளா வழியாக அங்கு வந்தடைந்தார். அங்கு ஒரு சின்ன மலைக்குன்று இருக்கிறது. அதனை Saint Thomas Mount என்று கூறுகிறார்கள். அங்கு ஒரு Church ம் இருக்கிறது. இங்கு புனித தோமையர் தமது கடைசி 16 ஆண்டு காலத்தை கழித்தார் போலும். பிறகு அங்கேயே அவருடைய எதிரி ஒருவர் அவரைக் கொன்று விட்டார். புனித தோமையர் அங்கேயே அடக்கம் செய்யப்பட்டார். பிறகு அவருடைய சடலம் இன்னொரு காலத்தில் Vatican எடுத்துச் செல்லப்பட்டது.

எப்படியிருந்தபோதிலும், புனித தோமையர் இங்கு வந்த நோக்கம், காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரைத் தேடி அவர்களுக்கு கிறித்துவத்தின் போதனையை எடுத்துக் கூறுவதுதான் என்பது புலனாகிறது.

சீடர் புனித தோமையர், ஹஸ்ரத் ஈசா (அலை) அவர்களின் சிலுவைச் சம்பவத்திற்குப் பிறகு அவருடன் பயணம் மேற்கொண்டார் என்று கூறப்படுகிறது. இவரைப் பற்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் தமது நூலான பராஹீனே அஹ்மதிய்யா தொகுதி 5-ல் இவ்வாறு குறிப்பிடுகிறார்கள்:

''இயேசுவின் சில சீடர்கள் இந்திய நாட்டிற்கு கண்டிப்பாக வந்தனர் என்பதை சில கிறித்தவர்களே ஒப்புக் கொள்கின்றனர். மேலும் சீடர் புனித தோமையர் மதராஸ் வந்ததும், இன்றுவரை மதராஸில் ஒவ்வோர் ஆண்டும் அதன் நினைவாக அங்கு ஒரு விழா நடப்பதும் எந்த அறிவுடையவருக்கும் மறைமுகமானதல்ல''.

இதுமட்டுமின்றி மல்ஃபூஸாத்திலும் புனித தோமையரைப் பற்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்கள்:

''ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் செய்யும் போது ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்களுடன் வெளியேறியதைப் போன்று, ஹஸ்ரத் ஈசா (அலை) அவர்களும் ஹிஜ்ரத்தின் போது புனித தோமையர் என்ற சீடருடன் வெளியேறினார்கள்.''

தமது பயணம் பற்றி மக்களுக்குத் தெரியாமல், பத்திரமாக கடந்து செல்ல வேண்டும் என்பதற்காக ஹஸ்ரத் ஈசா (அலை) அவ்வாறு செய்தார்கள். அவ்வாறே அவர் பயணம் மேற் கொண்டவாறு காஷ்மீர் சென்றடைந்தார்.

கேரளாவில் யூதர்களின் வரலாறும் இருக்கிறது. அதைப் பற்றியும் சுருக்கமாகக் கூறுகிறேன். இங்கு (கேரளாவில்) யூதர்கள் நீண்ட காலத்திற்கு முன்பே வந்து குடியேறினர். எனவே அந்த யூதர்களுக்கு தப்லீக் செய்வதற்காக ஹஸ்ரத் ஈசா (அலை) அவர்களின் சீடர் வருவது அவசியமாக இருந்தது. ஹஸ்ரத் ஈசா (அலை) அவர்கள் கொண்டு வந்த தூதுச் செய்தியை பரப்புவதற்காக ஈசாவின் சீடர்கள் அங்கு வர வேண்டியதிருந்தது. ஆக, சுருக்கமாக, நான் கூறவந்த நோக்கம், இந்த நகரமும் மிகப் பழமையான வரலாற்றைக் கொண்டது. இப்போது அல்லாஹ்வின் அருளினால் முஹம்மதிய்ய மஸீஹின் சஹாபிகளின் மூலமாக இந்த ஊரில் அஹ்மதிய்யத் வந்தபோது, அதுவும் அங்கே வளர்ந்து கொண்டிருக்கிறது. அடுத்த தலைமுறைகளும் ஈமானிலும், நன்றியுணர்விலும் முன்னேற்றமடைந்து கொண்டிருக்கிறது. மூஸாவுடைய மஸீஹின் ஹவாரி (அதாவது புனித தோமையர்) தனக்கென்று ஓரிடத்தை உருவாக்கிய அதே ஊரில், (அதாவது Saint Thomas Mount-ல்)

ஜமாஅத்திற்கு பள்ளிவாயில் கட்டுவதற்கான நல்வாய்ப்பு இவ்வாண்டு கிடைத்திருக்கிறது. இவ்வாறு அல்லாஹ் இந்த பள்ளிவாயிலின் பரக்கத்தினால் முன்னரைவிட அதிகமாக முஹம்மதிய்ய மஸீஹின் தூதுச் செய்தியை அந்த ஊரில் பரப்புவதற்கு நல்வாய்ப்பை வழங்கிக் கொண்டிருக்கிறான். அல்லாஹ் அவர்களுக்கு இந்த நல்வாய்ப்பை வழங்கிக் கொண்டே செல்வானாக. ஏனென்றால் இனி மக்களின் ஈடேற்றம் (கிறித்துவத்தின்) அந்த அபத்தமான கொள்கையை விட்டுவிட்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அடிமைத்துவத்தில் வருவதிலேயே இருக்கிறது. இறையடியாரை இறைவனாக்குவதற்கு பதிலாக ஏக இறைவனுக்கு முன்னால் குனிவதிலேயே இருக்கிறது. ஆக இதுதான் சென்னை பற்றிய சுருக்கமான வரலாறு.

இங்கிருந்து எனது அடுத்த பயணம் கேரளாவிலுள்ள கோழிக்கோட்டை நோக்கி இருந்தது. அந்த நகரத்திற்குத்தான் புனித தோமையர் முதன் முதலில் வந்தார். ஏனென்றால் யூதர்களின் பெருங் கூட்டத்தினர் இங்கு வந்து குடியேறி இருந்தனர். மேலும் இவர்கள் மலபாரி யூதர்கள் என அழைக்கப்பட்டனர். இவர்களின் வரலாற்றையும் பார்க்கும்போது ஹஸ்ரத் சுலைமான் (அலை) அவர்களின் காலத்திலேயே வியாபாரக் குழுக்கள் இங்கு வந்திருந்தன எனத் தெரிகிறது. அப்போது அவர்களுடன் யூத மதமும் இங்கு பரவியிருக்கும்.

புனித தோமையர் இங்கு வந்தபோது அவர் தமது வாழ்வின் பெரும் பகுதியை இங்கேயே கழித்தார். மேலும் யூதர்களுக்கு கிறித்துவத்தின் தூதுச் செய்தியை எட்ட வைத்தார். அப்போது பெரும்பாலோர் அவரது தூதுச் செய்தியை ஒப்புக் கொள்ளவும் செய்தனர். புனித தோமையர் மூலமாக கிறித்துவத்தை தழுவியவர்கள் இந்த ஊரில் நஸ்ரானீ கிறித்தவர்கள் அல்லது தோமையர் கிறித்தவர்கள் என்று அழைக்கப்படுகின்றனர். அவர்களில் தற்போதும் பலர் ஓரிறை கொள்கை உடையவராக இருக்கின்றார்கள். ஆக, இதுதான் அந்த ஊரில் உள்ள யூத, கிறித்தவ மார்க்கத்தின் சுருக்கமான வரலாறாகும்.

இங்கு இந்துக்கள் பெருமளவில் இருக்கின்றனர். முஸ்லிம்களும் அதிக எண்ணிக்கையில் உள்ளனர். ஆயினும் இவர்கள் ஒருவருக்கொருவர் ஒற்றுமையுடன் வாழ்கின்றனர் என்பது இறைவனின் அருளாகும். நாட்டின் ஒரு பகுதியில் குழப்பம் நடைபெற்றுக் கொண்டிருந்தாலும் கேரள மக்களுக்கு அதனுடன் எத்தொடர்புமில்லை. அவர்களுக்கு அது தெரிவதில்லை.

அரபு வியாபாரக் குழுக்கள் கேரளாவில் வந்ததனால்தான் இஸ்லாம் அங்கு பரவியது. வரலாற்றின்படி பார்க்கும்போது **வியாபார குழுக்களுடன் ஹஸ்ரத் மாலிக் பின் தீனார் இங்கு கிலாஃபத்தே ராஷிதாவின் கால கட்டத்திலேயே வந்தார்.** அவருடன் 12 அரபு வியாபாரக் குழுக்களும் வந்தன. அந்தக் காலத்தில் அங்குள்ள ராஜா பரோமல் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டார். பிறகு அந்த வியாபாரக் குழுக்களுடனேயே அவர் அரபு நாடு சென்றார். அந்த ராஜா இஸ்லாத்தின் அழகிய போதனைகளையும், அற்புதங்களையும் கண்டு இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டிருந்தார். இந்த ஊரில் ஓர் அரசர் இஸ்லாத்தை ஒப்புக் கொண்ட செய்தியை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் குறிப்பிட்டிருக்கிறார்கள். பெயர்களில் சற்று வித்தியாசம் இருக்கிறது. அந்தக் காலத்தின் பெயரிலும், அவர்களுடைய காலத்தின் பெயரிலும் வித்தியாசம் ஏற்பட்டிருக்கலாம். அங்குள்ள ஓர் அஹ்மதி குடும்பமும், நாங்களும் அந்த ராஜாவின் பரம்பரையைச் சார்ந்தவர்கள்தான் என என்னிடம் கூறினர். ஆக அந்த ராஜாவின் ஏதோ ஒரு நன்மைதான் அவருடைய குடும்பத்திலிருந்தே சிலருக்கு அஹ்மதிய்யத்தையும் ஏற்றுக் கொள்வதற்கு காரணமாக அமைந்தது.

இங்கு இன்னொன்றையும் நான் கூறிக் கொள்கிறேன். இங்கு கல்வியறிவு படைத்தவர்கள் ஏறக்குறைய 100 சதவீதம் பேர் உள்ளனர். மற்ற நாடுகளில் கல்வியறிவு படைத்தவர்கள் மிகக்குறைவாகும். அதுவும் முஸ்லிம்களிடத்தில் கல்வியறிவு என்பது இல்லாமைக்கு சமமாகும்.

ஆனால் இந்த இடத்தில் முஸ்லிம்களிடம் கூட கல்வியறிவு படைத்தவர்களின் சதவீதம் 90க்கும் அதிகமாக இருக்கிறது. மேலும் இந்த இடம் பல மார்க்கங்களை தன்னகத்தே கொண்டுள்ளது. மேலும் பல நன்கு படித்த, ஒளிமிக்க சிந்தனை கொண்டவர்கள் காணப்படுகின்றனர்.

இவர்களிடத்தில் சகிப்புத்தன்மையும் அதிகமாக இருக்கின்றது. **அஹ்மத்திய்யத்தின் தப்லீகும் சரியான முறையிலும் தொடர்முயற்சியுடனும் இருந்தால், இந்த நிலம் அஹ்மதிய்யத்திற்கு வளமிக்க நிலமாக மாறலாம் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. இன்ஷா அல்லாஹ்.**

உலகின் பிற பகுதிகளில் சில முஸ்லிம் அமைப்புகள் வெறுப்புகளையும், தீவிரவாதத்தின் நடைமுறைகளையும் மேற்கொண்டிருப்பதை போன்றே இங்கும் இந்த மாதிரியான முயற்சிகள் நடக்கின்றன. ஆனால் பொதுவாக மக்கள் இதற்கு எதிராக இருக்கின்றார்கள். அதனை முறியடிக்கவும் விரும்புகிறார்கள். ஏனெனில் இங்கு சில கூட்டங்கள் பற்றி தகவல் கிடைத்துள்ளன. நான் அங்கு செல்லும்போது அவர்கள் தவறான, எதிர்மறையான நடவடிக்கைகளை வெளிப் படுத்துவது முற்றிலும் சாத்தியமாக இருந்தது. ஆனால் எனக்கு கூறப்பட்டது என்னவென்றால், ஒன்றிரண்டு மாதங்களுக்கு முன்பே, குழப்பத்தை உருவாக்க விரும்பிய ஒரு கூட்டம் கண்டுபிடிக்கப்பட்டது. அல்லாஹ்வின் அருளினால் அரசாங்கம் அவர்களைப் பிடித்து, அடைத்து வைத்துவிட்டது.

எப்படியிருந்த போதிலும், அல்லாஹ் அருள்புரிந்தான். மேலும் நமது சுற்றுப்பயணத்தின் போது எதிரிகளின் எந்த கூட்டத்திலிருந்தும் எதிர்ப்புக்குரல் தோன்றவில்லை. மாறாக, இங்குள்ள ஓர் அஹ்மதி பத்திரிகையாளர் எனக்கு எழுதியிருப்பதாவது, எதிரியான முஸ்லிம் அமைப்புகள் அல்லது பிரிவுகளின் பத்திரிகைகள் கூட மிகவும் நாகரிகமான முறையில் நான் அங்கு சென்றதைப் பற்றிய செய்தியை வெளியிட்டுள்ளது.

நமது ஜமாஅத்தின் நிகழ்ச்சிகளும் முழுமையான முறையில் நடைபெற்றன. நான் தங்கியிருந்த ஓர் அஹ்மதியின் வீட்டிலிருந்து பள்ளிவாயில் 20 நிமிட தூரத்தில் இருந்தது. மேலும் நமது பள்ளிவாயிலும் நகரத்தின் மத்தியில் இருக்கிறது. நமது வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்துகொண்ட மாற்றுமத விருந்தினர்களில் மிகப்பெரிய அரசியல் தலைவர் ஒருவர் என்னிடம், உங்களுடைய பள்ளிவாயில் நகரத்தின் இதயத்தில் இருக்கிறது எனக் குறிப்பிட்டார். எனவே, இனி இன்ஷா அல்லாஹ் நகரத்தின் இதயத்தில் இருக்கும் இந்தப் பள்ளிவாயிலிருந்து அன்பின் தூதுச்செய்தியும் பரவும். அதுவே, உள்ளங்களை வெல்லப் போகின்றது - இன்ஷா அல்லாஹ்.

அங்கு அரசாங்கம் போதுமான அளவுக்கு ஒத்துழைப்பு வழங்கியது. ஓர் அஹ்மதி போலீஸ் அதிகாரி தமது Team உடன் வந்திருந்தார். ஆனால் பொதுமக்களின் ஒத்துழைப்பும் பொதுவாக அங்கு நன்றாக இருந்தது. தினசரி குறைந்தது 2 முறை பள்ளிவாயிலுக்கு சென்ற போதும் மக்கள் கஷ்டப்படவில்லை அல்லது அவர்கள் தடுக்கப்பட்டதாக உணரவில்லை. அவர்களாகவே Traffic-ல் நின்று மகிழ்ச்சியுடன் வழிவிட்டார்கள். அதனால்தான் இந்த நிலத்திலிருந்து சரியானமுறையில் பயனடைவதற்கு அஹ்மதிகள் முயற்சி செய்ய வேண்டுமென்று கூறினேன்.

கோழிக்கோட்டில், கோழிக்கோடு ஜமாஅத் மற்றும் அதனைச்சுற்றியுள்ள ஜமாஅத்துகளைச் சார்ந்த அஹ்மதிகளுடன் சந்திப்பு நடந்தது. ஆயிரக்கணக்கில் வந்திருந்த எல்லா சகோதரர்களுடனும் அல்லாஹ்வின் அருளினால் சந்திப்பு ஏற்பட்டது. இந்த சந்திப்பின்போதும் அன்பின் தொடர்பும், நன்றியுணர்வை வெளிப்படுத்தியதும் வியப்பிற்குரிதாகும். பலர் சில ஆண்டுகளுக்கு முன்புதான் பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைந்துள்ளனர். ஆனால் மனத்தூய்மையிலும், நன்றியுணர்விலும் முன்னேற்றமடைந்துள்ளார்கள். ஜமாஅத்தின் அமைப்புடன் எந்த அளவுக்கு ஒன்றிவிட்டார்கள் என்றால் இவர்கள் பழைய அஹ்மதிகளா? புது அஹ்மதிகளா? என்பதே தெரியவில்லை. தொண்டுகளில் முன்னணியில் இருக்கிறார்கள் (புதியவர்கள்) பலரிடம் ஜமாஅத் பொறுப்புகள் இருக்கின்றன. மிக அழகிய முறையில் பொறுப்புகளை நிறைவேற்றி வருகின்றனர். ஜமாஅத்தின் அமைப்பைப் புரிவதற்கும், தமது தகுதியை மேம்படுத்துவதற்கும் பலமுறை அவர்கள் கேள்விகளை கேட்டுக்கொண்டிருந்தனர். ஜமாஅத்தின் வேலைகளை சரியாக செய்வதற்காக வும் தமது ஞானத்தை அதிகப்படுத்திக்கொள்ளவும் முயற்சி செய்து கொண்டிருந்தனர். இப்படிப்பட்ட புதிய அஹ்மதிகள் எல்லா இடத்திலும் இருக்கவேண்டும். இல்லையென்றால்

பைஅத்துகளை செய்ய வைப்பதில் எந்த பயனுமில்லை. **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் ஓரிடத்தில், எனக்கு எண்ணிக்கையைப் பெருக்குவது குறிக்கோளல்ல. தக்வாவில் முன்னேற்றக் கூடியவர்கள் வேண்டும் எனக் கூறினார்கள்.**

எனவே உலகிலுள்ள பிற அஹ்மதிகளுக்கும், அவ்வாறே இந்தியாவிலுள்ள மற்ற ஜமாஅத்து களுக்கும் நான் கூறிக்கொள்கிறேன். பைஅத் இந்த அளவுக்கு கனிந்த பழமாக இருக்கவேண்டும். அதன் விதையிலிருந்து மேலும் பல கனிகளைத்தரும் மரங்கள் உருவாகவேண்டும். **காணாமற்போன பைஅத்துகளை தேடுங்கள் என நான் ஜமாஅத்திடம் கூறுகிறேன் என்றால், தர்பிய்யத் குறைவின் காரணமாக மறைந்து போய்விடக்கூடிய பைஅத்துகளை கொண்டு வராதீர்கள் என்ற தூதுச்செய்யும் அதில் இருக்கிறது.** அவர்களின் உதாரணம் பறவையைப் போன்றதென்றால் அதுபற்றி திருக்குர்ஆன் இவ்வாறு கூறுகிறது. நீர் அவற்றை நன்றாகப் பழக்குவீராக. பிறகு நீர் அவற்றை அழைத்தால் அவை உம்மை நோக்கி ஓடிவரும். (2:261) எனவே **ஜமாஅத்தின் பணிக்காக எவ்வித சாக்குப்போக்கும் சொல்லாமல் தம்மை அர்ப்பணிக்கக்கூடிய அஹ்மதிகள் வேண்டும். ஜமாஅத்தில் இணைந்ததுமே ஜமாஅத் அமைப்புடன் ஒன்றிடவிட வேண்டும்.**

தப்லீக் செய்பவர்கள், தாமும் தமது சுயவிருப்பங்களை விட்டு சுதந்திரமாகி தப்லீக் செய்யதாவரை இது சாத்தியமில்லை. தப்லீக் செய்பவர்களும் அஸ்லுஹா சாபிதுன்; வஃபர்வுஹா ஃபிஸ்ஸமா (திருக்குர்ஆன் 14:25) என்ற நிலையில் இருக்கவேண்டும். அதாவது அவர்களின் வேர் உறுதியாக இருக்கவேண்டும்; அதன் கிளைகள் வானத்தை நோக்கி செல்ல வேண்டும். அவர்களுக்கு உலகத்தைப்பற்றிய எவ்வித அச்சமும் இருக்கக்கூடாது. அவர்களின் செயல்கள் காட்டுவதற்காக அல்ல; மாறாக, அல்லாஹ்வின் திருப்திக்காக இருக்க வேண்டும். இறைவன் பக்கம் அழைப்பவர்கள் இப்படியிருந்தால் அவர்கள் மூலமாக வரக்கூடியவர்களும் ஜமாஅத் அமைப்புடன் சரியான முறையில் இணைந்து விடுவார்கள். ஜமாஅத் அமைப்பும் புதிதாக வருபவர்களை உண்மையான முறையில் பாதுகாக்கிறது. பிறகு அவர்களிடமிருந்து வேலை வாங்குகிறது. இவ்வாறு நடக்கவில்லையென்றால் பிறகு பைஅத்துகள் வீணானவைதான். சில நேரத்தில் பைஅத்துகள் எங்கே சென்றன என்பதே தெரிவதில்லை. ஆக, இது பற்றி சுருக்கமாக நான் கூறிவிட்டேன். இந்த கருத்து பற்றி இன்னொரு நேரத்தில் நான் மேலும் குறிப்பிடுவேன்.

**புதிதாக பைஅத் செய்தவர்களாக இருந்தும் பொருள் தியாகத்திலும் முன்னுதாரணமாகத் திகழும் இந்த உதாரணத்தை முதலில் நான் தென்னிந்தியாவிலேயே கண்டேன்.** தற்போது கட்டப்பட்டுள்ள பள்ளிவாயில் நகரத்தின் மத்தியில் இருக்கிறது. மேலும் இது மிக விலை மதிப்புள்ள இடமாகும்.

இதனுடன் பல கோடி ரூபாய் மதிப்பில் ஒரு பிளாட்டும் விற்பனைக்கு இருந்தது. எனவே அங்குள்ள ஜமாஅத் அதனை வாங்குமாறு மேலிடத்தில் விண்ணப்பித்தது. அதற்கு மேலிடம், இல்லை; நீங்கள் உங்கள் செலவில் வாங்கிக் கொள்ளுங்கள் எனக் கூறியது. அவர்கள் யோசித்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் நான் அங்கு செல்வதற்கு முன்பே அவர்களிடம் ஒரு ஆர்வம் உருவானது. வாங்க வேண்டுமென உறுதியாக எண்ணம் கொண்டனர். கணிசமான தொகையும் வசூலானது. பிறகு இவர்கள், முதலில் எங்களால் வாங்க இயலாது எனக் கூறினோம்; ஆனால் இப்போது நாங்கள் எங்கள் செலவிலேயே வாங்குவோம் என்று கூறினர். இன்னும் சொல்லப்போனால், அந்த பிளாட்டின் பெரும் பகுதி ஓர் அஹ்மதிக் குரியதாக இருந்தது; அவர், நான் இதற்கான தொகையையே வாங்கமாட்டேன் எனக்கூறினார். இவ்வாறே பலர் இன்னும் பொருள் தியாகத்திற்காக வாக்குறுதி வழங்கினர். இவ்வாறு நான் அந்த பிளாட்டிற்கு அருகில் நின்று கொண்டிருந்த நேரத்திலேயே அங்குள்ள சில வசதிபடைத்த அஹ்மதிகள் அந்தப் பிளாட்டை வாங்கிவிட்டார்கள். ஆக, தியாகத்தைப் பொருத்தவரையிலும் இவர்கள் மிகவும் முன்னேறியவர்களாவர். அல்லாஹ் புதிய அஹ்மதிகளையும், பழைய அஹ்மதிகளையும் உண்மையான இஸ்லாத்தை எட்டவைப்பவர்

களாக ஆக்குவானாக. இந்த அழகிய போதனை களை பேணி நடப்பவர்களாகவும் ஆக்குவானாக. தியாகத்தின் உண்மையான உயிர்நாடியைப் புரிபவர்களாகவும் ஆக்குவானாக.

கோழிக்கோட்டில் லஜ்னாவின் ஒரு சிறிய இஜ்திமாவும் நடந்தது. குறைந்தது 4000 பெண்களும், சிறுமிகளும் இருந்தனர். யூ.கே. லஜ்னா இஜ்திமாவின் எண்ணிக்கையைவிட அதிகமாக காணப்பட்டது. அல்லாஹ்வின் அருளினால் இதற்கு நல்ல விளைவு ஏற்பட்டது. ஒவ்வொரு பெண்ணின், ஒவ்வொரு சிறுமியின் முகத்தில் தொண்டு செய்வதற்கான ஒரு புது துடிப்பு காணப்பட்டது. அவர்கள் வெளிப்படுத் தியது போன்று அவர்கள் தமது நிகழ்ச்சிகளை பல மடங்கு முன்னேற்றமடையச் செய்வார்கள் என்று நான் நம்புகிறேன். **கேரளாவின் லஜ்னா, இந்திய லஜ்னாக்களில் முதல் வரிசையில் இருக்கும் பெண்களாவர்.** ஆனால், இனி இவர்கள் துள்ளிக்குதித்தவர்களாக மேலும் முன்னேற்றப் பாதையில் செல்வார்கள் என எனக்குத்தெரிகிறது. இந்தியாவின் பிற லஜ்னாக்களும் எனது இந்த விஷயத்தைக் கேட்டுக்கொண்டிருப்பார்கள் என நினைக்கிறேன். அவர்களுக்கும் இந்த விஷயத்தைக் கேட்டு ஆர்வம் பிறக்க வேண்டும். நன்மைகளில் ஒருவரையொருவர் முந்திச் செல்லும் பண்பை அல்லாஹ் உருவாக்குவானாக.

ஜுமுஆ குத்பாவை அங்கிருந்தே முதன்முறையாக M.T.A மூலம் ஒளிப்பரப்பானதை கேட்டீர்கள். அந்த ஜுமுஆவில் ஆயிரக் கணக்கில் அஹ்மதிகள் வருகை தந்திருந்தனர். அங்கு ஒரு ஹோட்டலில் ஜமாஅத் ஒரு வரவேற்பு நிகழ்ச்சிக்கான ஏற்பாடும் செய்திருந்தது. அதில் பெரும்பாலான எண்ணிக்கையில் அரசு அதிகாரிகள், கல்வியறிவு படைத்தவர்கள் வருகை தந்திருந்தனர். நகரத்தின் மேயரும் வருகை தந்திருந்தார். அவர் ஜமாஅத்தைப் பற்றியும், இஸ்லாத்தின் அழகிய போதனைகளைப் பற்றியும் மிக அழகான முறையில் வெளிப்படுத்தினார். சிலர் சம்பிரதாயமாக வெளிப்படுத்தி விடுகிறார்கள்தான். ஆனால் சிலர் என்னை பின்னர் சந்தித்துப் பேசியதிலிருந்து, உண்மையிலேயே அவர்களுக்கு மனமாற விஷயங்கள் பிடித்து விட்டன எனத் தெரிந்தது. அதனை பத்திரிகைகளும் மிக நன்றாக தமது செய்திகளில் வெளியிட்டிருந்தன.

கோழிக்கோட்டில் மிகப்பெரிய பத்திரிகை மாத்ருபூமி. இதன் முதன்மை ஆசிரியர் இந்து மதத்தைச் சார்ந்த கோபாலகிருஷ்ணன் என்பவர். அவர் என்னை இண்டர்வியூ எடுத்தார். அதனை தமது பத்திரிக்கையில் வெளியிடவும் செய்தார். இந்த பத்திரிகையை படிப்பவர்களின் எண்ணிக்கை ஒன்றரை கோடியைவிட அதிகமாகும். மார்க்கத்தைப் பற்றியும், உலகத்தைப்பற்றியும் பல்வேறு கேள்விகளை அவர் கேட்டுக் கொண்டிருந்தார். நல்ல தாக்கத்தைப் பெற்றுச் சென்றார். இவர்கள் சுகந்திரமான சிந்தனை கொண்டவர்கள்தான். எனினும் எல்லா நல்ல விஷயங்களையும் தம்மிடமிருந்து வந்தது என்ற கருத்தை வெளியிட விரும்புகின்றனர். இவர் நன்கு கல்வியறிவு படைத்தவர். திருக்குர்ஆன் மொழியாக்கத்தையும் இவர் படித்துள்ளார். தமது பத்திரிகையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப்பற்றியும் ஒரு சில வரிகள் எழுதுபவராவார். ஆனால் என்னிடம் நீண்ட நேரம் பேசிய பிறகு அவர், உங்களிடம் பேசியதிலிருந்து நீங்கள் காந்திஜீயினால் அதிக தாக்கத்திற்குள்ளாகியிருக்கிறீர்கள் எனத் தெரிகிறது என்று மிக எளிதாகக் கூறினார். நான் உடனே, அவரிடம், நான் ஒருபோதும் காந்திஜீயினால் தாக்கத்திற்கு உள்ளாகவில்லை. நான், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மீது இறங்கிய திருக்குர்ஆனின் போதனைகளின் தாக்கத்திற் குள்ளாகியிருக்கிறேன். அதன் ஒளியிலேயே உங்களிடம் இந்த எல்லா விஷயங்களையும் கூறியிருக்கிறேன் எனக் கூறினேன். ஆக, எல்லா நல்ல விஷயங்களையும் தம்மைச் சார்ந்தவையாகக் குறிப்பிடும் பழக்கம் சிலருக்கு இருக்கிறது. எப்படியிருந்த போதிலும், நல்ல அமைதியான சூழ்நிலையில் இந்த எல்லா விஷயங்களும் அவருடன் நடைபெற்றன. அவரும் அவ்வனைத்து விஷயங்களையும் தமது பத்திரிக்கையில் குறிப்பிட்டது அவருடைய நேர்மையாகும்.

பிறகு நாங்கள் கோழிக்கோட்டிலிருந்து கொச்சினுக்கு சென்றோம். அதுவும் நல்ல ஜமாஅத். அங்கேயும் அக்கம் பக்கத்திலுள்ள ஜமாஅத்துகளிலிருந்து மக்கள் அங்கு

வந்திருந்தனர். அவர்கள் அங்கு ஒரு புதிய பள்ளி வாயிலைக் கட்டியிருந்தனர். அதன் திறப்பு விழா நடைபெற்றது. அத்துடன் இன்னும் மூன்று, நான்கு பள்ளிவாயில்கள் திறக்கப்பட விருந்தன. அங்கு நான் செல்ல முடியவில்லையென்றாலும் அங்கேயே ஒரே இடத்தில் மக்கள் ஒன்று கூடிவிட்டார்கள். எனவே புதிய பள்ளி வாயில்களின் பெயரையும் குறிப்பிட்டு அவற்றின் துவக்க விழாவையும் நடத்தி விட்டோம். அக்கம் பக்கத்தில் கட்டப்பட்ட பள்ளி வாயில்களும் மக்கள் அதிகமாக வாழும் இடங்களில்தான் கட்டப்பட்டன. அங்கு வாழும் கிறித்தவர்களும் இந்துக்களும் பள்ளிவாயில் திறப்பு விழாவிற்கு நான் வருவதை முன்னிட்டு தமது வீடுகளுக்கு வெள்ளையடித்து, பெயிண்ட் அடித்து அலங்கரித்திருந்தார்கள்.

கொச்சினில் The Hindu என்ற மிகப் பெரிய ஒரு பத்திரிக்கை உள்ளது. இந்த பத்திரிக்கை இந்தியாவின் எல்லா பெரிய நகரங்களிலிருந்தும் கோடிக்கணக்கான பிரதிகளை வெளிய்யிடு கின்றது. பிறகு Indian Express என்ற பத்திரிக்கை இருக்கின்றது. இதன் பிரதிகளும் கோடிக்கணக்கில் வெளியாகின்றன. இதன் மூத்த பிரதிநிதியும் என்னை பேட்டி எடுத்தார். அவர்களுக்கும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வாதம் பற்றியும், அஹ்மதி முஸ்லிம்களுக்கும் பிற முஸ்லிம்களுக்கும் இடையிலான வேறுபாடு பற்றியும், இன்னும் பல்வேறு தலைப்புகளிலும், இஸ்லாம், அமைதி பற்றியும் உரையாடல் நடைபெற்றது. இந்த பத்திரிக்கை நிருபர்கள் சில நிமிடங்களுக்காக பேட்டி எடுக்க வந்தார்களென் றாலும் ஏறக்குறைய ஒன்றரை மணி நேரம் பேட்டி எடுத்தனர். கேள்விகளைக் கேட்டு விளக்கம் பெற்றனர். ஆக, அல்லாஹ்வின் அருளால் இந்த வகையிலும் அந்த பகுதியில் மிகப்பரந்த அளவில் அஹ்மதிய்யத்தைப் பற்றிய தப்லீக் நடைபெற்று விட்டது.

இங்கேயும் வரவேற்பு நிகழ்ச்சி நடைபெற்றது. அதில் பல அறிஞர்களும், பேராசிரியர்களும், பொறியாளர்களும், எம்.பி. களும் கலந்து கொண்டனர். அவர்களில் பெரும்பாலானவர்கள் நீங்கள் இஸ்லாத்தை என்ன அருமையாக எடுத்துக் கூறுகிறீர்கள். உங்களைப் போன்றவர்களால்தான் உலகத்தில் அமைதியை நிலைநாட்ட முடியும் என்று கூறினார்கள்.

சுருக்கமாக, மிக நல்ல, பயனுள்ள சுற்றுப்பயணமாக இருந்தது. அஹ்மதிகளுக்கு தர்பிய்யத்தைப் பொருத்த அளவில் நல்ல பயன் ஏற்பட்டது. கோடிக்கணக்கானவர்களுக்கு அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தியும் சென்றடைந்துவிட்டது. சுற்றுப்பயணத்தினால் சில நேரத்தில் தப்லீகிற்கான புதிய வழிகளும் திறக்கின்றன. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஒருமுறை கூறினார்கள்:

''காலத்தின் கலீஃஃபாவின் சுற்றுப் பயணம் தப்லீக் செய்வதற்காக இருப்பதில்லை. அவ்வாறு நினைக்கவும் கூடாது. மாறாக அந்தப் பகுதியிலுள்ள நிலைமைகளை அறிந்து அங்கு தப்லீகிற்கான அறிவுப் பூர்வமான செயல்பாட்டிற் காகவும், தப்லீகை விரிவுபடுத்துவதற்காக புதிய ஆக்கப் பூர்வமான செயல் திட்டங்களை தீட்டுவதற்காகவும் இருக்கிறது.''

இவ்வாறு சுற்றுப் பயணத்தினால் தப்லீகிற்கான சில சந்தர்ப்பங்கள் கிடைத்து விடுகின்றன. ஆனால் தப்லீக் ஒரு தொடர்ச்சியான செயலாகும். அதை அங்குள்ளவர்களால் தான் சிறப்பான முறையில் செய்ய முடியும். தென்னிந்தியாவின் இந்த இடங்கள் மார்க்கங்களுடன் தொடர்புடையவையாக இருக்கின்றன. எனவே சரியான திட்டங்களுடன் தப்லீக் பணியை முடுக்கினால் அல்லாஹ் சிறந்த விளைவை உருவாக்குவான். எனவே அன்புடனும், பண்புடனும், மேன்மையுடனும் இந்தத் தூதுச் செய்தியை எட்ட வையுங்கள்.

**தமிழக்கம்**
**மவ்லவி O.M. முஸ்ஸம்மில் அஹ்மத் H.A.**

**National Watch Company**
Opposite to Bus Stand
Somanur, Tiruppur

**Chennai Hardwares**
241, Aroct Road, Chennai 600 026.
Ph : 2473 5373

# இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ்
# ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மத் (ரலி)

ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் முஹ்மூத் அஹ்மத் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மகனாவார்கள். அவர்கள் 1889 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 12ஆம் நாள் பிறந்தார்கள். அவர்களுடைய தோற்றம் பிறப்பதற்கு முன்னரே ஹஸ்ரத் இமாம் மஹ்தி (அலை) அவர்களுக்கு நற்செய்தி மூலம் இறைவனால் முன்னறிவிக்கப்பட்டது.

1884 ஆம் ஆண்டு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தனித்திருந்து இறைவனை வழிபட முடிவு செய்தார்கள். அந்த விருப்பத்தை நிறைவேற்றுவதற்காக சுஜன்பூர் என்ற இடத்திற்குச் செல்ல நாடினார்கள். அப்போது 'உமது நோக்கம் ஹோஷ்யார்பூரில் நிறைவேறும்' என்ற இறையறிவிப்பைப் பெற்றார்கள். அதன்படி 1886 ஆம் ஆண்டு அவர்கள் ஹோஷ்யார்பூர் சென்றார்கள். அங்கு அவர்கள் ஷேக் மெஹர் அலி சாஹிபுக்கு சொந்தமான தனியாக அமைந்த ஒரு வீட்டின் முதல் மாடியில் தங்கினார்கள். நாற்பது நாட்கள் தனித்திருந்து தொடர்ந்து இறைவழிபாட்டிலும், இறைதியானத்திலும், துஆவிலும் ஈடுபட்டிருந்தார்கள். இறைவனின் ஆற்றலையும், கருணையையும், மகத்துவத்தையும் வெளிப்படுத்துகின்ற விதத்தில் ஒரு மிகச் சிறந்த அடையாளத்தை வெளிப்படுத்துமாறு பிரார்த்தனை செய்தார்கள். இவ்வாறு நாற்பது நாட்கள் கழிந்த பின்னர் 1886ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 20ஆம் நாள் ஓர் அறிவிப்பை வெளியிட்டார்கள். அதில், தாம் அதுவரை அறியாத பல விஷயங்களைப் பற்றிய ஞானத்தை இறைவன் தமக்கு அருளியதாகக் குறிப்பிட்டார்கள். அவற்றுள் ஒன்று, **தமக்குப் பிறக்க இருக்கும் வாக்களிக்கப்பட்ட ஒரு மகனைப் பற்றிய நற்செய்தியாகும்** என்று குறிப்பிட்டிருந்தார்கள். அந்த மகனின் பண்புகளை பற்றியும், ஆற்றல்களைப் பற்றியும், அவர் ஆற்றவிருக்கும் அரும் பணிகளைப் பற்றியும், அந்த மகனின் பல்வேறு சிறப்புத் தன்மைகளைப் பற்றியும் அந்த அறிவிப்பில் குறிப்பிட்டிருந்தார்கள். வாக்களிக்கப்பட்ட அந்த மகன் அன்றிலிருந்து 9 ஆண்டுகளுக்குள் பிறப்பார் என்றும் இறைவன் தமக்கு அறிவித்ததாகக் குறிப்பிட்டார்கள்.

இந்த அறிவிப்புக்கிணங்க 1889-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 12ஆம் நாள் ஓர் ஆண்குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தை தான் பின்னாளில் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் இரண்டாவது கலீஃபாவாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மத் (ரலி) அவர்கள் ஆவார்கள். 1914ஆம் ஆண்டு மார்ச் 13ஆம் நாள் அவர்கள் இரண்டாவது கலீஃபாவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

அவர்கள் கலீஃபாவாகத் தேர்ந்தெடுக்கப் படுவதற்கு முன்னரே அஹ்மதிய்யத்தின் பணியில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார்கள்.

தமது 17வது வயதில் 'தஷ்ஹீதுல் அதான்' என்னும் இலக்கிய அமைப்பைத் துவக்கினார்கள். இது ஜமாஅத்தின் இளைஞர்களை மனதிற் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட ஓர் அமைப்பாகும். இந்த அமைப்பின் சார்பில் அதே பெயரில் ஒரு பத்திரிக்கையும் ஆரம்பிக்கப்பட்டது. 1911ஆம் ஆண்டு ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் அனுமதி பெற்று 'அன்ஸாருல்லாஹ்' (முதியோர் அணி) என்னும் அமைப்பைத் தோற்றுவித்தார்கள். 1912ஆம் ஆண்டு எகிப்துக்கும், ஹஜ்ஜை நிறைவேற்றுவதற்காக அங்கிருந்து மக்காவுக்கும் சென்றார்கள். 1913ஆம் ஆண்டு ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் முஹ்மூத் அஹ்மத் (ரலி) அவர்களுக்கு 24 வயதே ஆன பொழுது அவர்கள் 'அல்ஃபஸ்ல்' என்னும் வார ஏட்டைத் துவக்கினார்கள். அதுவே பின்னாளில் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் சார்பில் வெளியிடப் படும் நாளேடாகப் பரிணமித்து இன்றுவரை வெளிவந்து கொண்டிருக்கிறது. ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் முஹ்முத் அஹ்மத் (ரலி) அவர்களே 'அல்ஃபஸ்ல்' ஏட்டின் நிறுவன ஆசிரியராகவும் விளங்கினார்கள்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மத் (ரலி) அவர்கள் காதியானில் உள்ள பள்ளியில் தமது ஆரம்பக் கல்வியைக் கற்றார்கள். 1898ஆம் ஆண்டு தஃலீமுல் இஸ்லாம் உயர்நிலைப் பள்ளி ஆரம்பிக்கப்பட்ட பொழுது அதில் சேர்ந்து பயின்றார்கள். அவர்களுடைய உடல் நலக் குறைவு காரணமாக 1905 ஆம் ஆண்டு

மெட்ரிகுலேஷன் தேர்வில் தோல்வியுற்றதோடு அவர்களின் பள்ளிக் கல்வி ஒரு முடிவுக்கு வந்தது. அவர்கள் ஹஸ்ரத் மவ்லவி ஹக்கீம் நூருத்தீன் (ரலி) அவர்களிடம் திருக்குர்ஆனும் ஹதீதும் கற்றார்கள். **1907 ஆம் ஆண்டு மலக்கு ஒருவர் மூலமாக இறைவன் அவர்களுக்கு திருக்குர்ஆனின் முதல் அத்தியாயமான சூராஃபாத்திஹாவின் விளக்கவுரையைக் கற்றுக் கொடுத்தான்.** அந்த விளக்கத்தையே அவர்கள் பின்னாளில் திருக்குர்ஆனுக்கு எழுதிய விரிவுரையில் வரைந்துள்ளார்கள்.

## அவர்களின் கிலாஃபத் காலம்

அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இரண்டாவது கலீஃபாவான ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் முஹ்மூத் அஹ்மத் (ரலி) அவர்கள் தமது கிலாஃபத் காலத்தில் உலகம் முழுவதும் இஸ்லாத்தைப் பரப்புவதற்காக மாபெரும் நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள். இலண்டன் மாநகரில் பள்ளிவாசலும், பிரச்சார நிலையமும் அமைப்பதற்காக நிலம் வாங்கப்பட்டது. 1924 ஆம் ஆண்டு தமது இங்கிலாந்து பயணத்தின் பொழுது பள்ளிவாசலுக்கான அடிக்கல் நாட்டினார்கள். **இந்தப் பள்ளியே இலண்டன் நகரில் முஸ்லிம்களால் கட்டப்பட்ட முதல் பள்ளிவாசலாகும்.** இந்தப் பள்ளியைக் கட்டுவதற்காக இந்தியாவிலுள்ள அஹ்மதி பெண்கள் தங்கள் நகைகளை அன்பளிப்பாகத் தந்தனர். இறைவனருளால் இந்தப் பள்ளி கட்டும் பணி இரண்டு ஆண்டுகளில் நிறைவேறியது.

## இலண்டன் பயணம்

இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் இங்கிலாந்து பயணத்தின் முக்கியமான நோக்கம் அங்கு நடைபெற்ற உலக மார்க்கங்களின் மாநாட்டில் கலந்து கொள்வதாகும். அம்மாநாட்டில் பல்வேறு மார்க்கங்களின் தலைவர்களும், பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் 1934-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 12ஆம் நாள் பத்து பேர் கொண்ட ஒரு குழுவுடன் காதியானிலிருந்து புறப்பட்டார்கள். அந்தக் குழு ஜூலை 15ஆம் நாள் மும்பையிலிருந்து கப்பலில் புறப்பட்டு எட்டு நாட்களுக்குப்பின் ஏடன் துறைமுகத்தைச் சென்றடைந்தது. ஜூலை 28ஆம் நாள் ஸைத் துறைமுகத்தை அடைந்தது. ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹும், அவர்களது குழுவினரும் கெய்ரோவில் மூன்று நாட்கள் தங்கினார்கள். பிறகு அங்கிருந்து புறப்பட்டு ஜெரூஸலம், டமாஸ்கஸ் போன்ற இடங்களுக்குச் சென்றார்கள். ஆகஸ்ட் மாதம் 22ஆம் நாள் இலண்டன் மாநகரைச் சென்றடைந்தார்கள். ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் இலண்டன் வருகையைப் பற்றிய செய்தி இலண்டனின் முக்கிய பத்திரிக்கைகள் அனைத்திலும் வெளிவந்தது. இங்கிலாந்தில் அவர்கள் ஆற்றிய முதல் உரை செப்டம்பர் 13ஆம் நாள் போர்ட்ஸ்மவ்த் (Ports Mouth) என்ற இடத்தில் நிகழ்த்தப்பட்டது. அந்த உரை ‘விண்ணுலகிலிருந்து வரும் ஒரு நற்செய்தி’ என்ற தலைப்பில் அமைந்திருந்தது. (இந்த உரையின் மறுபதிப்பு Review of Religions பத்திரிக்கையின் ஜனவரி 2003 இதழில் வெளிவந்துள்ளது)

உலக மார்க்கங்களின் இலண்டன் மாநாடு செப்டம்பர் 22ஆம் நாள் துவக்கப்பட்டது. அந்த மாநாட்டில் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் ஆற்றிய உரை ‘அஹ்மதிய்யா இயக்கம்’ என்ற தலைப்பில் நிகழ்த்தப்பட்டது. ஆங்கிலத்தில் எழுதப்பட்ட அவ்வுரை சௌத்ரி சர். முஹம்மத் ஸஃப்ருல்லாஹ் கான் (ரலி) அவர்களால் மாநாட்டில் வாசித்தளிக்கப்பட்டது. அவ்வுரைக்கு மக்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பிருந்தது. உரையின் முடிவில் மக்களின் கரவொலியும், மகிழ்ச்சி ஆரவாரமும் அடங்கச் சில நிமிடங்கள் ஆயின. மாநாட்டில் தலைவரும் மார்க்க உண்மைகளைத் தெளிவாக விளக்கி மிகச் சிறந்த உரையாற்றியமைக்காக கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களை மிகவும் பாராட்டினார்.

1924 ஆம் ஆண்டு அக்டோபர் 19ஆம் நாள் மாலை இலண்டன் பள்ளிவாசலின் அடிக்கல்லை ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் நாட்டினார்கள்.

## மார்க்க ஒற்றுமைக்காக ஆற்றிய அரும்பணி

இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் காலத்தில்தான் மார்க்கங்களிடையே ஒற்றுமையை நிலை நாட்டுவதற்காக ‘சர்வ சமய மாநாடுகள்’ அறிமுகம் செய்து வைக்கப்பட்டன. 1928 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 17ஆம் நாள் ஆரம்பித்து வைக்கப்பட்ட ஒரு திட்டத்தின் கீழ் ஒவ்வொரு வருடமும் முஸ்லிம்களும் முஸ்லிம் அல்லாதவர்களும் ஒன்றாகக் கலந்து கொள்ளும்

பொதுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. அந்தக் கூட்டங்களில் பேசிய தலைவர்கள் மார்க்க ஒற்றுமைக்காகத் தத்தம் மார்க்கங்கள் காட்டும் உயரிய போதனைகளை எடுத்து வைக்கும் நல்வாய்ப்பு அனைவருக்கும் வழங்கப்பட்டது. பல்வேறு மார்க்கங்களுக்கு மத்தியில் நிலவும் தப்பெண்ணங்களும், வெறுப்புணர்வும் நீங்கவும், மார்க்கங்களுக்கிடையே ஒற்றுமை தழைத்தோங்கவும் இத்தகைய கூட்டங்கள் அடிகோலின என்றால் அது மிகையாகாது. இப்படிப்பட்ட மத நல்லிணக்கக் கூட்டங்கள் இன்றளவும் உலகம் முழுவதும் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தால் நடத்தப்பட்டு வருகின்றன.

## தஹ்ரீகே ஜதீத் திட்டம்

1934 ஆண்டு ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் 'தஹ்ரீகே ஜதீத்' என்னும் புதிய திட்டத்தைத் துவக்கினார்கள். இந்தத் திட்டத்தின் கீழ் ஜமாஅத்தின் உறுப்பினர்கள் வாரி வழங்கிய பொருளாதார தியாகத்தின் மூலம் இஸ்லாத்தின் தூய கொள்கைகளை உலக மக்களுக்கு எடுத்துக் சொல்லும் ஒப்பற்ற பணி நடைபெற்றது; பள்ளி வாசல்கள் கட்டப்பட்டன; கொள்கை பரப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டன; பள்ளிக் கூடங்களும், மருத்துவமனைகளும் திறக்கப்பட்டன. இந்தப் பணிகள் அனைத்தும் உலகின் பல பகுதிகளிலும் நடைபெற்றன.

1934ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் 'மஜ்லிஜ் அஹ்ராரே இஸ்லாம்' என்ற (தீவிரவாத) அரசியல் அமைப்பின் எதிர்ப்பால் அஹ்மதிய்யா ஜமாஅத் மிகக் கடுமையான வன்முறைகளுக்கு இலக்காகியது. அந்த ஆண்டு அக்டோபர் மாதம் அஹ்ரார் அமைப்பைச் சேர்ந்தவர்கள் காதியானுக்கு அருகில் ஒரு மாநாட்டை நடத்தினர். அதில் அஹ்மதிய்யா ஜமாஅத்திற் கெதிராக வெறியையும், வேகத்தையும் தூண்டக் கூடிய உரைகள் நிகழ்த்தப்பட்டன. இப்படிப்பட்ட வன்முறையைத் தூண்டக் கூடிய உரைகளுக்கு மத்தியிலும் ஜமாஅத் சகோதரர்கள் மிகுந்த பொறுமையையும், சகிப்புத்தன்மையையும் கடைபிடித்தார்கள்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில்தான் 1934ஆம் ஆண்டு நவம்பர் 23,30 மற்றும் டிசம்பர் 7ஆம் தேதி ஆகிய மூன்று தினங்களில் நிகழ்த்தப்பட்ட ஜுமுஆ பேருரைகளில் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் 'தஹ்ரீகே ஜதீத்' என்னும் புதிய திட்டத்தை ஜமா அத்தின் முன் வைத்தார்கள். ஆரம்பத்தில் இந்தத் திட்டம் மூன்று ஆண்டுகளுக்கு மட்டுமே ஏற்படுத்தப்பட்டது. பின்னர் அதன் முக்கியத்துவத்தையும், பயன்களையும் கருத்திற்கு கொண்டு இத்திட்டம் நிரந்தரமானதாக ஆக்கப்பட்டது. அருளுக்குரிய இந்தத் திட்டம் இன்றளவும் ஜமாஅத்தில் நிலைபெற்றுள்ளது. இந்தத் திட்டத்தின் மூலம் ஜமாஅத்தின் உறுப்பினர்கள் எளிய வாழ்க்கையை மேற்கொள்ளவும், இஸ்லாத்தைப் பரப்பும் தூய பணிக்காக தங்கள் நேரத்தையும், செல்வத்தையும் செலவிடவும் வலியுறுத்தப்பட்டது. நவம்பர் 23, 30 ஆகிய தினங்களில் ஆற்றப்பட்ட ஜுமுஆ பேருரைகளில் இதன் 19 அம்ச திட்டங்கள் அறிவிக்கப்பட்டன. இந்த 19 அம்ச திட்டங்களையும் பற்றி ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் நவம்பர் 30ஆம் நாள் ஆற்றிய ஜுமுஆ பேருரையில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்கள்:

''(இந்தத் திட்டத்தின் கீழ் கூறப்படும்) ஒவ்வொரு விஷயமும் நீண்ட ஆய்வுக்குப்பின் தேர்ந்தெடுக்கப்பட்டவையாகும். ஜமாஅத்தின் முன்னேற்றத்திற்குப் பயன்படாத எந்தவோர் அம்சமும் இதில் இல்லை. (இதிலுள்ள) ஒவ்வொரு விஷயமும் ஒரு விதையைப் போன்றதாகும்; அந்த விதை மிகப் பிரம்மாண்டமாக வளரக் கூடியதாகும். அவை பெரிய மரங்களாக உருப் பெறக் கூடியவையும் நமது எதிரிகளை அடக்கி ஆளக் கூடியவையாக மாறக் கூடியவையுமாகும். அவற்றுள் எந்த ஒன்றும் அலட்சியப் படுத்தக் கூடியவையல்ல. அவற்றுள் ஏதாவது ஒன்று இல்லாவிட்டாலும் நமது முன்னேற்றம் என்ற கட்டடம் முழுமை பெறாது. எனவே நான் நமது ஜமாஅத்தைச் சேர்ந்த உறுப்பினர்களுக்குக் கூறிக் கொள்கிறேன். உங்களுள் எவருக்கெல்லாம் இயலுமோ அவர்கள் அனைவரும் இந்தத் திட்டத்தில் பங்கு கொண்டு ஜமாஅத் விரைவில் செழித் தோங்கி வளர உதவுவதன் மூலம் இறைவனின் அருளைப் பெற முயற்சிக்க வேண்டும்''. (ஜுமுஆ பேருரை 30-11-1934)

## உலகம் முழுவதும் கொள்கை பரப்பு நிலையங்களை அமைத்தல்

1913ஆம் ஆண்டு இங்கிலாந்தில் முதல் கொள்கை பரப்பு நிலையம் அமைக்கப்பட்டது. இலங்கையிலும், மொரீஷியஸிலும் 1915ஆம் ஆண்டு கொள்கை பரப்பு நிலையங்கள்

அமைக்கப்பட்டன. 1921ஆம் ஆண்டு அமெரிக்காவிலும், ஆப்பிரிக்காவிலும் கொள்கை பரப்புப் பணிகள் துவங்கப்பட்டன. தஹ்ரீகே ஜதீத் திட்டத்தின் கீழ் மேற்கு ஆப்பிரிக்கா, கிழக்கு ஆப்பிரிக்கா, மத்திய கிழக்கு நாடுகள்; டிரினிடாட், கயானா உள்ளிட்ட உலகின் பல பாகங்களுக்கும் கொள்கை பரப்புநர்கள் அனுப்பப்பட்டனர். ஐரோப்பாவில் ஸ்பெயின், இத்தாலி, அல்பேனியா, யூகோஸ்லேவியா, ஹங்கேரி, போலந்து, ஸ்விட்சர்லாந்து ஆகியவையும் கொள்கை பரப்புநர்கள் அனுப்பப்பட்ட நாடுகளில் அடங்கும்.

ஐரோப்பாவில் நிறுவப்பட்ட முதல் அஹ்மதிய்யா பள்ளிவாசல் 1924ஆம் ஆண்டு அடிக்கல் நாட்டப்பட்ட இலண்டனில் உள்ள ஃபஸ்ல் பள்ளி வாசலாகும். ஐரோப்பாவின் இரண்டாவது பள்ளிவாசல் ஹாலந்திலுள்ள ஹேக் (Hague) நகரில் கட்டப்பட்ட பள்ளி வாசலாகும். டென் மார்க்கிலுள்ள கோபென்ஹேகன் நகரில் 1956ஆம் ஆண்டு கொள்கை பரப்பு நிலையம் அமைக்கப்பட்ட்து. 1957 ஆம் ஆண்டு ஹாம்பெர்கில் ஃபஸ்லே உமர் பள்ளி வாசலுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. 1958ஆம் ஆண்டு ஃபிராங்ஃபர்ட் நகரில் மஸ்ஜிது நூர் திறந்துவைக்கப்பட்டது. ஸூரிச் (Zurich) நகரில் பள்ளிவாசல் கட்டுவதற்காக 1959ஆம் ஆண்டு நிலம் வாங்கப்பட்டு 1962ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25ஆம் நாள் அடிக்கல் நாட்டப்பட்டது.

### திருக்குர்ஆன் மொழியாக்கங்கள்

இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலத்தில் திருக்குர்ஆன் உலகின் பல்வேறு மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டது. டச்சு மொழிபெயர்ப்பு 1952 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. டேனிஷ் மொழி பெயர்ப்பு 1961 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. ஜெர்மன் மொழி பெயர்ப்பு 1953 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. அதன் இரண்டாவது பதிப்பு 1959ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது.

46 வெளிநாட்டு கொள்கை பரப்பு நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டன. அவை காலப்போக்கில் வளர்ந்தோங்கியதன் மூலம் இமாம் மஹ்தி (அலை) அவர்கள் பெற்ற இறையறிவிப்பான 'நான் உமது பிரச்சாரத்தை பூமியின் எல்லைகள் வரை எட்டவைப்பேன்' என்ற முன்னறிவிப்பு நிறைவேறியது.

### முஸ்லிஹ் மவ்வூது (வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதி) என்ற வாதம்

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் 1886ஆம் ஆண்டு பிப்ரவரி 20 ஆம் நாள் வெளியிட்ட முன்னறிவிப்பில் காணப்பட்ட சீர்த்திருத்தவாதி தானே என்ற அறிவிப்பை ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் குறிப்பிட்ட காலம்வரை செய்யாமல் இருந்து வந்தார்கள். ஆனால் அவர்கள் தாம் அந்த சீர்திருத்தவாதி என்பதை இறைவன் 1944ஆம் ஆண்டு அவர்களுக்கு ஒரு கனவின் மூலம் வெளிப்படுத்தினான். அப்போது ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் லாஹூரில் வழக்கறிஞர் ஷேக் பஷீர் அஹ்மத் சாஹிபுக்குச் சொந்தமான வீட்டில் தங்கி இருந்தார்கள். கனவில் காட்டப்பட்ட விஷயங்கள் அவர்கள் தாம் வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதி என்பதை பகிரங்கமாக அறிவிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தின. **அவர்கள் 1944ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 28 ஆம் நாள் நிகழ்த்திய ஜுமுஆ உரையில் அந்தக் கனவின் விபரங்களை கூறித் தாமே அந்தச் சீர்த்திருத்தவாதி என்ற அறிவிப்பை வெளியிட்டார்கள்.** இதைப் பற்றிய மற்றொரு அறிவிப்பு 1944 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 20-ஆம் நாள் ஹோஷ்யார்பூரில் இதற்கென கூட்டப்பட்ட ஒரு கூட்டத்தில் வெளியிடப்பட்டது. அந்த நாள் 58 ஆண்டுகளுக்கு முன் ஹஸ்ரத் இமாம் மஹ்தி (அலை) அந்த முன்னறிவிப்பை வெளியிட்ட அதே நாளில் அதே இடத்தில் செய்யப்பட்டது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இந்த முன்னறிவிப்பு நிறைவேறிய நாள் தான் இன்றுவரை உலகெங்குமுள்ள அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமா அத்தில் முஸ்லிஹ் மவ்வூது (வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதி) தினமாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

### நிர்வாகத் திறமை

தமது கிலாஃபத் காலத்தின் ஆரம்பத்தில் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் இஸ்லாமிய பிரச்சாரத்திற்கான வழிவகைகளைப் பற்றிக் கலந்தாலோசிப்பதற்காக மஜ்லிஜ் ஷூரா என்னும் ஆலோசனை சபையைக் கூட்டினார்கள். 1922 ஆம் ஆண்டு முதல் மஜ்லிஸ் ஷூரா என்ற அந்த அமைப்பு ஜமாஅத்தில் நிரந்தரமாக செயல்பட்டு வருகிறது. சாதாரணமாக

அந்த சபை ஆண்டுக்கு ஒருமுறை கூடி ஜமாஅத் சம்பந்தமான விஷயங்களை கலந்தாலோசித்து கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் ஒப்புதலுக்குச் சமர்ப்பிக்கும்.

1919ஆம் ஆண்டு தலைமையகத்தில் பல்வேறு துறைகள் அமைக்கப்பட்டு ஜமாஅத்தின் நிர்வாக அமைப்பு பலப்படுத்தப்பட்டது. பின்னர் ஜமாஅத்தின் அமைப்பில் கிளை அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டன. 1922ஆம் ஆண்டு 15 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கென **'லஜ்னா இமாயில்லாஹ்'** (அஹ்மதிய்யா மகளிர்) அமைப்பும், 15 வயதுக்கு உட்பட்ட சிறுமிகளுக்கென **'நாஸிராத்துல் அஹ்மதிய்யா'** என்ற அஹ்மதிய்யா சிறுமிகள் அமைப்பும் ஏற்படுத்தப்பட்டன. சிறிது காலத்திற்குப் பின் 1938ஆம் ஆண்டு 15 வயதிற்கு மேல் 40 வயதுக்கு உட்பட்ட அஹ்மதிகளுக்கென **'குத்தாமுல் அஹ்மதிய்யா'** என்ற அஹ்மதிய்யா இளைஞர் அமைப்பும், 40 வயதுக்கு மேற்பட்ட அஹ்மதிகளுக்கென **'அன்ஸாருல்லாஹ்'** என்ற அஹ்மதிப் பெரியவர்கள் அமைப்பும் ஏற்படுத்தப்பட்டன.

ஹஸ்ரத் இமாம் மஹ்தி (அலை) அவர்களின் காலத்தில் நிறுவப்பட்ட தஃலீமுல் இஸ்லாம் உயர்நிலைப் பள்ளி இடைநிலைக் கல்லூரியாக மேம்படுத்தப்பட்டு பின்னர் 1905ஆம் ஆண்டு மூடப்பட்டது. அந்தக் கல்லூரி 1944 ஆம் ஆண்டு பட்டப்படிப்பு வரை கற்பிக்கும் கல்லூரியாக மீண்டும் துவங்கப்பட்டது. இந்தியா - பாகிஸ்தான் பிரிவினைக்குப் பின் பாகிஸ்தானிலுள்ள தமது தலைமையகமான ரப்வாவிற்கு இடமாற்றம் செய்யப்பட்டது.

1930 ஆம் ஆண்டு ஏற்பட்ட காஷ்மீர் பிரச்சினையில், ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் முக்கியமான பங்காற்றி **காஷ்மீர் முஸ்லிம்கள் சமூக ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் அடிப்படை உரிமைகளைப் பெறுவதற்கு அரும்பணி ஆற்றினார்கள்.**

### ரப்வா நகர் நிர்மானம்

1947ஆம் ஆண்டு நடைபெற்ற இந்திய பாகிஸ்தான் பிரிவினையின் போது ஏற்பட்ட சிரமமான காலகட்டத்தில் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் ஜமாஅத்தை மிகத் திறமையாக வழி நடத்தினார்கள். அக்காலத்தில் ஜமாஅத்தின் நிர்வாக அலுவலகங்கள் சில காலம் லாஹூரில் செயல்பட்டன. சில காலம் கழித்து ஜமாஅத்தின் சார்பில் 1000 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டது. அந்நிலத்தைச் சீர்படுத்தி ரப்வா என்ற நகரம் நிர்மாணிக்கப்பட்டு அங்கு ஜமாஅத்தின் தலைமையகம் செயல்படத் தொடங்கியது. அந்நகர நிர்மாணப் பணிக்கான அடிக்கல் 1948ஆம் ஆண்டு செப்டம்பர் 20ஆம் நாள் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களால் நாட்டப்பட்டது. ரப்வாவில் கட்டப்பட்ட முதல் பள்ளிவாசலுக்கான அடிக்கல் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களால் 1949 ஆம் ஆண்டு அக்டோபர் 3ஆம் நாள் நாட்டப்பட்டது. அந்த இடத்தில் தான் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் 1948 ஆம் ஆண்டு செப்டம்பர் 20ஆம் நாள் முதன் முதலாக தொழுகை நடத்தினார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

1956ஆம் ரப்வாவில் **ஃபஸ்லே உமர் மருத்துவமனைக்கான** அடிக்கல் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களால் நாட்டப்பட்டது. இந்த மருத்துவமனை இரண்டு ஆண்டுகளில் கட்டி முடிக்கப்பட்டு 1958ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 21 ஆம் நாள் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இந்த மருத்துவமனையின் வசதிகளும், சேவைகளும் நாள் தோறும் பெருகி வருகின்றன.

### வக்ஃபே ஜதீத் திட்டம்

1957 ஆம் ஆண்டு டிசம்பர் 27 ஆம் நாள் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் 'வக்ஃபே ஜதீத்' என்னும் புதிய திட்டத்தைத் துவக்கி வைத்தார்கள். இத்திட்டத்தின் முக்கியமான நோக்கம் கிராமப்புறங்களில் வாழும் ஜமாஅத் உறுப்பினர்களின் ஆன்மீக முன்னேற்றத்தில் கவனம் செலுத்துவதாகும். 1958 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் முதல் நாள் பதினான்கு 'முஅல்லிம்கள்' (மார்க்கப் பயிற்சியாளர்கள்) நாட்டின் சில குறிப்பிட்ட கிராமப் பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். தற்போது இத்தகைய முஅல்லிம்களின் எண்ணிக்கை பல ஆயிரங்களாகப் பெருகிவிட்டது. ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள், பிற்காலத்தில் அஹ்மதிய்யா முஸ்லிம்

ஜமாஅத்தின் நான்காவது கலீஃபாவாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஹஸ்ரத் மிர்ஸா தாஹிர் அஹ்மத் (ரஹிமஹுல்லாஹ்) அவர்களை வக்ஃபே ஜதீத் திட்டத்தின் முதல் நாஸிமாக (நிர்வாகியாக) நியமித்தார்கள்.

## ஐரோப்பிய பயணம்

1955ஆம் ஆண்டு ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் ஐரோப்பாவிலுள்ள பல கொள்கை பரப்பு நிலையங்களுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டார்கள். இந்தப் பயணத்தின் போது டாமஸ்கஸ், வெபனான், ஜெனீவா, ஸூரிச், ஹாம்பர்க், ஹேக் போன்ற இடங்களுக்குச் சென்றார்கள். 1955 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 22, 23, 24 ஆகிய தேதிகளில் இலண்டன் மாநகரில் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் தலைமையில் ஒரு மாநாடு நடத்தப்பட்டது. அந்த மாநாட்டில் அமெரிக்கா, இங்கிலாந்து, ஸ்விட்சர்லாந்து, ஜெர்மனி, ஸ்பெயின், ஹாலந்து, நைஜீரியா, டிரினிடாட் போன்ற நாடுகளிலிருந்து பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

## சொற்பொழிவுகளும், நூல்களும்

இறைவன் அவர்களுக்கு அளித்த அறிவு, ஆற்றல் ஆகியவற்றின் துணை கொண்டு ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் 200க்கும் மேற்பட்ட அரிய நூல்களை எழுதியுள்ளார்கள். நூற்றுக்கணக்கான சொற்பொழிவுகளையும் நிகழ்த்தியுள்ளார்கள். அவர்கள் எழுதிய மிகச் சிறந்த நூல்களுள் திருக்குர்ஆனைக் கற்பதற்கு ஒரு முன்னுரை, அஹ்மதிய்யத்திற்கு ஓர் அழைப்பு, இஸ்லாமிய புத்துலகத் திட்டம், ஃதிக்ரே இலாஹி, பிரிவினையைப் பற்றிய ஓர் உண்மையான ஆய்வு, இறைவனைத் தேடுவோருக்கான வழி ஆகியவற்றைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். திருக்குர்ஆனுக்கு அவர்கள் வழங்கிய விரிவுரையான தஃப்ஸீரே கபீரும், அவ்விரிவுரையின் சுருக்கமான தஃப்ஸீரே ஸஹீரும் அவர்கள் வழங்கிய நூல்களுள் தலை சிறந்தவையாகும்.

இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலம் 1914 ஆம் ஆண்டு மார்ச் 14 ஆம் தேதி முதல் 1965 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 8ஆம் தேதி வரை 52 ஆண்டுகள் நீடித்தது. அவர்களின் எழுத்தும், பேச்சும் ஜமாஅத் உறுப்பினர்களின் நல்லொழுக்க, ஆன்மீக நிலைகளை உயர்த்துவதாக அமைந்தன.

1954ஆம் ஆண்டு மார்ச் 10ஆம் நாள் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் தமது மாலை நேரத்து தொழுகையை நிறைவேற்றிவிட்டுத் திரும்பும் பொழுது எதிரி ஒருவன் அவர்களின் கழுத்துப் பகுதியில் கத்தியால் குத்தி விட்டான். ஆனால் இந்தக் காயத்தின் காரணமாக அவர்களின் உடல் தளர்ந்தாலும், அவர்கள் எப்போதும் போல் தமது பணியைத் தொடர்ந்தார்கள். இவ்வாறு தமது சொல்லாலும், செயலாலும் தாமே வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதி என்பதை உலகுக்கு உணர்த்திய இவர்கள் 1965ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 8ஆம் தேதிக்கும் 9ஆம் தேதிக்கும் இடைப்பட்ட இரவில் காலமானார்கள்.

வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதியின் தோற்றத்தைப் பற்றிய முன்னறிவிப்பைப் பற்றி ஹஸ்ரத் சௌத்ரி சர் முஹம்மது ஸஃபருல்லாஹ்கான் அவர்கள் கூறும் வார்த்தைகளோடு இச்சிறு கட்டுரையை நிறைவு செய்கிறேன்.

அவர்கள் கூறுகிறார்கள்: ''இந்த முன்னறிவிப்பில் காணப்பட்ட ஒவ்வோர் அம்சமும் நிறைவேறிய விதம் அந்த முன்னறிவிப்பு தெய்வீக வழிகாட்டலுக்கிணங்க செய்யப்பட்டது என்பதை சிறிதும் சந்தேகத்திற்கு இடமில்லாமல் நிரூபிக்கிறது. அந்த முன்னறிவிப்பு நிறைவேறியது இறைவன் ஒருவன் இருக்கின்றான் என்பதையும் இஸ்லாத்தின் தூய நபி (ஸல்) அவர்களின் உண்மைத்தன்மையையும், திருக்குர்ஆன் இறைநூல் என்பதையும், வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உண்மையையும், ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் தூய தன்மையையும் அவர்கள் இறைவனால் நியமிக்கப்பட்ட கலீஃபா என்பதையும் உறுதியாக நிரூபிக்கின்றன.'' (அஹ்மதிய்யத் இஸ்லாத்தின் மறுமலர்ச்சி என்ற நூல்)

(The Review of Religion என்னும் பத்திரிக்கை 2008 பிப்ரவரி இதழில் வெளிவந்த கட்டுரையை தழுவி எழுதப்பட்டது.)

**தொகுப்பு**

**S.S.H. முஹம்மது லப்பை**

# இயேசு வந்துவிட்டார்

**அசன் அபூபக்கர்**

இதோ வருகிறார்; அதோ வருகிறார் என்று இயேசுவின் அன்பர்கள் இயேசுவின் இரண்டாம் வருகைக்குத் தொடர்ந்து கட்டியம் கூறிக் கொண்டிருப்பதை நாம் நன்கறிவோம். இன்று நேற்றல்ல; பல காலமாகவே இயேசு கிறிஸ்து வானத்திலிருந்து இறங்கி வருவதை காண கிறிஸ்தவ உலகு மிகுந்த ஆர்வத்தோடும் ஆரவாரத்தோடும் காத்துகிடப்பது நமக்குத் தெரியும்.

இதைப் போன்றுதான் இயேசுவின் காலத்திய யூத சமுதாயம், வானத்திலிருந்து இறங்கி வருகின்ற ஒருவருக்காக ஆவலோடு காத்திருந்தது; அவர்தான் மேசியா. வானத்திலிருந்து இறங்கி வந்து பூமியில் தோன்றும் இந்த மேசியாதான் தங்களை ரோமானிய அடிமைத் தளையிலிருந்து விடுவிப்பார் என்றும், தங்களுக்கு ஒரு சுதந்திர நல்வாழ்வை வழங்குவார் என்றும் அவர்கள், காலங்காலமாக நம்பி வந்தனர். **மேசியா என்ற சொல்லின் கிரேக்க மொழி வடிவம்தான் கிறிஸ்து ஆகும்.** ஆகவே அன்றைய யூத சமுதாய மக்கள் கிறிஸ்து என்ற ஒருவர் வானத்திலிருந்து இறங்கி வரக் காத்திருந்தார்கள் எனச் சுருங்கக் கூறலாம்.

இப்போது நாம் அவர்களின் மற்றொரு நம்பிக்கையையும் நினைவில் கொள்ள வேண்டியது அவசியம். முன்னொரு காலத்தில் எலியா தீர்க்கதரிசி என்பவர் உயிருடன் வானத்திற்கு ஏறிச் சென்றுள்ளார்கள் என்பதும், அவர் மீண்டும் அதே உடலோடும் உயிரோடும் இப்பூவுலகிற்குத் திரும்பி வருவார் என்பதும் அந்த யூத மக்களின் நம்பிக்கையாகும். மேசியா என்ற கிறிஸ்து வானத்திலிருந்து இறங்கி தங்களுக்கு மத்தியில் வந்து தோன்றுவதற்கு முன்னர், ஏற்கனவே வானத்திற்கு ஏறிச் சென்றிருந்த அதே எலியா தீர்க்கதரிசி அங்கிருந்து இறங்கி வந்து மேசியாவுக்காக அவரது வழியை ஆயத்தப் படுத்துவார் என்றும் யூத கோத்திரத்தினர் நம்பி வந்தனர்.

'எலியா வருவார்' என்ற தமது நீண்ட கால நம்பிக்கைக்கு ஆதாரமாக அவர்கள், பைபிள் பழைய ஏற்பாட்டில் உள்ள மல்கியா என்ற புத்தகத்தையே சுட்டிக்காட்டினார்கள். மல்கியாவில் எலியா தீர்க்கதரிசியின் இரண்டாம் வருகை குறித்து இவ்வாறு கூறப்பட்டுள்ளது:

**''இதோ கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள் வருகிறதற்கு முன்னே நான் உங்களிடத்திற்கு எலியா தீர்க்கதரிசியை அனுப்புகிறேன்.''**

*(மல்கியா 4:5)*

இந்த எலியா, மேசியா தோன்றுவதற்கு முன்னர் வானத்திலிருந்து உயிருடன் இப்பூமிக்கு வந்து அதாவது பாலஸ்தீனத்துக்கு வந்து மேசியாவின் வருகைக்கான பாதையை ஆயத்தப் படுத்துவார் என்றும் அக்கால யூத மக்கள் நம்பி இருந்தனர்.

எனவே இயேசு பிரான் பாலஸ்தீனத்தில் அவதரித்து யூத மக்களுக்கு மத்தியில் போதித்து வந்த காலையில் அவரை நோக்கி, நீர் கிறிஸ்து என்பது உண்மையானால் எலியா தீர்க்கதரிசி உமக்கு முன்னர் தோன்றியிருக்க வேண்டுமே... அவர் எங்கே? என்று அவர்கள் தமது நியாயமான, உண்மையான ஐயப்பாட்டை அவர் முன் எடுத்து வைத்தனர்.

அதற்கு மறுமொழியாக இயேசு பிரான் கூறிய பதிலை அறிய ஆவலாக உள்ளவர்களுக்கு மத்தேயு சுவிசேஷகர் என்ன கூறியுள்ளார் என்பதை இங்கு பார்ப்போம்:

'நீங்கள் ஏற்றுக் கொள்ள மனதாயிருந்தால், வருகிறவனாகிய எலியா இவன்தான். கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக் கடவன்.' *(மத்தேயு 11:14-15)* என்று அவர்களுக்கு மத்தியில் யோர்தான் நதிக்கரையில் ஞானாஸ்நானம் வழங்கி வந்த யோவானைச் சுட்டிக்காட்டி நீங்கள் எதிர்பார்த்திருக்கும் எலியா 'இவன்தான்' என அடையாளம் காட்டினார்.

மேலும். '........அப்பொழுது அவருடைய

சீஷர்கள் அவரை நோக்கி: அப்படியானால் எலியா முந்தி வர வேண்டும் என்று வேதபாரகர் சொல்கிறார்களே, அதெப்படியென்று கேட்டார்கள், இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: எலியா முந்தி வந்து எல்லாவற்றையும் சீர்படுத்துவது மெய்தான்' என்று இயேசு பிரான் சொல்லிக் காட்டியதன் மூலம் எலியா தமக்கு 'முந்தி வந்து' தோன்றிவிட்டார் என்பதையும் அவர் தமக்காகச் செய்ய வேண்டிய 'எல்லா வற்றையும்' சீர்படுத்திக் கொண்டிருக்கிறார் என்பதையும் அப்பாமர யூதர்களுக்குப் புரிய வைத்தார். இயேசு கிறிஸ்து தமது வாயால் தந்துள்ள இந்த விளக்கத்திலிருந்து, ஒரு திர்க்கதரிசியின் மறுஅவதாரம் அல்லது அவரது இரண்டாம் வருகை என்பது அவரைப் போன்ற இன்னொருவரின் வருகைதானே தவிர அவரே மீண்டும் வருவதல்ல என்பதை நாம் தெளிவாகப் புரிந்து கொள்ள முடிகிறது.

மற்றொரு நிகழ்வு மூலமும் ஒரு தீர்க்கதரிசியின் இரண்டாவது வருகை என்பதன் உண்மையான பொருள் என்ன என்பதை நாம் அறிந்து கொள்ளலாம். சகரியா தீர்க்கதரிசிக்கு யோவான் என்ற ஒரு மகன் பிறப்பான் என்னும் அறிவிப்பு தேவதூதன் மூலம் அவருக்கு அருளப்பட்டிருந்தது. அந்த அருள்வாக்கி லிருந்து எலியா தீர்க்கதரிசியின் இரண்டாவது வருகை என்பது அதே எலியா தோன்றுவார் என்பதல்ல; மாறாக யோவான் (ஞானஸ்நானன்) தோன்றியதால் நிறைவேறிவிட்டது என்பதை கீழ்க்கண்ட திருவசனங்கள் தெரிவிக்கின்றன. எப்படி எனக் காண்போம்.

கர்த்தருடைய தூதன் சகரியாவை நோக்கி, '............ உன் மனைவியாகிய எலிசபத்து உனக்கு ஒரு குமாரனைப் பெறுவாள். அவனுக்கு யோவான் என்று பேரிடுவாயாக............. அவன் எலியாவின் ஆவியும் பலமும் உடையவனாய் அவருக்கு முன்னே நடப்பான்...........' என்று தீர்க்கதரிசனம் உரைத்தான். *(லூக்கா 1:13-17)* அதாவது சகரியா தீர்க்கதரிசிக்கு ஒரு மகன் பிறப்பான்; அந்த மகன் எலியா தீர்க்கதரிசியின் ஆவியும் பலமும் கொண்டவனாக இயேசுவுக்கு முன்னர் தோன்றுவான் என்பதையே இத்திரு வசனம் நமக்கு எடுத்துரைக்கிறது. வேறு வார்த்தைகளில் சொல்வதானால் எலியா தீர்க்கதரிசியின் இரண்டாம் வருகை என்பது அவரைப் போன்ற வேறொருவரால் அதாவது யோவான் (ஞானஸ்நானன்) இவ்வுலகில் தோன்றியதால் நிறைவேறிவிட்டது.

மேற்கொண்ட பைபிள் திருவசனங்களிலிருந்து ஒரு தீர்க்கதரிசியின் இரண்டாம் வருகை என்றால் அதே பழைய தீர்க்கதரிசி இரண்டாவதாக தோன்றமாட்டார் என்பதை நாம் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம். மாறாக முன்னர் சென்ற அதே தீர்க்கதரிசியின் பண்புகளோடும் தத்துவத் தோடும் புதிதாக வேறொரு தீர்க்கதரிசி தோன்றுவார் என்றுமே நாம் பொருள் கொள்ள வேண்டும் என்பதை மேற்சொன்ன திருவசனங்கள் நமக்கு உணர்த்துகின்றன. எனவே யூத மக்களுக்கு மத்தியில் ஏற்கனவே தோன்றி நற்போதனை செய்து மறைந்த இயேசு பெருமானின் இரண்டாவது வருகையும் இப்படித்தான் நிகழ வேண்டும் என்பது மறுக்க முடியாத உண்மையாகும். அதாவது இவ்வுலகை விட்டுப் பிரிந்து சென்றுவிட்ட இயேசு பிரான் மீண்டும் இரண்டாவதாக இப்பூமிக்கு வருவாரென்றால், அதே பழைய இயேசு வரமாட்டார்; அவரது பண்புகளோடும், தத்துவத்தோடும் அவரைப் போன்ற வேறு ஒருவர் தோன்றுவார் என்பதுதான் அதற்குப் பொருளாகும்.

இவ்வுலகைவிட்டுப் பிரிந்து சென்ற ஒருவர் அல்லது இறந்து போன ஒரு மனிதன் மீண்டும் இவ்வுலகிற்கு வரமுடியாது என்பது இயற்கைச் சட்டமாகும். அதுவே இறைவன் வகுத்த விதியுமாகும். உண்மையிலேயே கிறிஸ்து வாகிய இயேசு சிலுவையில் உயிர் துறந்துவிட்டார் என்றால் அல்லது இவ்வுலகைத் துறந்து வானத்திற்கு ஏறிச் சென்றுவிட்டார் என்றால் அவர் மீண்டும் இவ்வுலகிற்கு உயிருடன் திரும்பி வர முடியாது என்பது எவராலும் மீற முடியாத ஒரு விதியாகும். அவ்வாறாயின் இயேசு பிரான் மீண்டும் இரண்டாவதாக இவ்வுலகிற்கு வருவார் என்று கூறும் பைபிள் தீர்க்கதரிசனங்களின் உண்மையான பொருள்தான் என்ன? என்ற ஒரு கேள்வி இங்கு எழுகின்றது. அந்தக் கேள்விக்கும்

விடை இருக்கிறது.

இவ்வுலகைத் துறந்து வானத்துக்குச் சென்ற தீர்க்கதரிசி ஒருவர், உயிரோடு வானத்திற்குச் சென்ற பின்னர், மீண்டும் இவ்வுலகிற்குத் திரும்ப வருவாரென்றால் இதைக் குறித்து பைபிளின் தீர்க்கதரி சனங்கள் என்ன கூறுகின்றன? என்பதை நாம் முதலில் கண்டறிய வேண்டும். அதன் பின்னர் அத்தீர்க்கதரிசனங்களுக்கு அந்த வேதாகமத்தில் என்ன பொருள் கொடுக்கப்பட்டுள்ளது என்பதையும் நாம் அறிந்து கொள்ள வேண்டும். அத்துடன் இவற்றைப் போன்ற முந்தைய தீர்க்கதரிசனங்கள் எவ்வாறு நிறைவேறி உள்ளன என்பதையும் நாம் கண்டறிய வேண்டியது அவசியமாகும். இதன் மூலம் இயேசுவின் இரண்டாவது வருகையைப் பற்றி தீர்க்கதரிசனத்தின் பொருளையும், அது எவ்வாறு நிறைவேறும் என்பதையும், பைபிள் அடிப்படையில் நாம் அறிந்து கொள்ளலாம்.

இவ்விடத்தில் நாம் கவனத்தில் கொள்ள வேண்டிய முக்கியமாக மற்றொரு கருத்து உள்ளது. அதாவது இயேசு பிரான் தம்மை எதிர்த்துக் கொடுமைகளுக்குள்ளாக்கிய யூதர்களை நோக்கி ஓர் எச்சரிக்கை விடுத்துள்ளார். அதன்படி தேவனின் இராஜ்ஜியம் கொடிய உள்ளங்கொண்ட அந்த யூத சமுதாயத்தை விட்டு நீக்கப்பட்டு வேறொரு சமுதாய மக்களிடம் வழங்கப்படும். வேறு வார்த்தைகளில் கூறுவதனால், இறைவனின் திட்டப்படி இதுகாறும் யூத மக்களுக்கு தொடர்ந்து வழங்கப்பட்டு வந்த 'தீர்க்கதரிசி' என்ற இறையருள் (நபித்துவம்) இனி அந்த யூத கோத்திரத்தார்களிடமிருந்து பிடுங்கப்பட்டு அதற்குத் தகுதியான வேறொரு சமுதாயத்தாருக்கு வழங்கப்பட்டுவிடும். ஆகவே இயேசுவுக்குப் பிறகு யூத சமுதாயத்தில் தீர்க்கதரிசிகள் (நபிமார்கள்) தோன்றமாட்டார்கள். இதுவே இயேசு பிரான் விடுத்த எச்சரிக்கையின் நுட்பமான கருத்தாகும். (தொடரும்)

# மறைவுச் செய்தி

சாத்தான்குளம் அஹ்மதியா முஸ்லிம் ஜமாஅத்தின் தலைவர் ஜனாப் A.M.S. ஷரீஃப் அஹ்மது சாஹிப் அவர்கள் கடந்த 2.1.2009 வெள்ளிக்கிழமை காலை 5.40 மணிக்கு காலமானார்கள் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

**இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்.**

நிச்சயமாக நாம் அல்லாஹ்வுக்கே உரியவர்கள், அவனிடமே திரும்பிச் செல்பவர்கள்.

மர்ஹூம் A.M.S. ஷரீஃப் அஹ்மது அவர்கள் மர்ஹூம் A.M. செய்யது அஹ்மது சாஹிப் அவர்களின் மகனாவார்கள். அவர்கள் 1934 ஆம் ஆண்டு ஜூலை 10ஆம் நாள் சாத்தான்குளத்தில் பிறந்தார்கள். 2000 ஆம் ஆண்டு முதல்சாத்தான்குளம் ஜமாஅத்தின் தலைவராக மிகச் சிறப்பாக பணியாற்றி வந்தார்கள். மர்ஹூம் அவர்கள் ஆரம்பகாலத்தில் சென்னையில் இருந்தபோது சென்னை ஜமாஅத்தின் செயற்குழு உறுப்பினராகவும் சென்னை மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ்வின் பொறுப்பாளராகவும் பணியாற்றியது குறிப்பிடத்தக்கது. மர்ஹூம் அவர்கள் வஸிய்யத் செய்திருக்கிறார்கள்.

அன்னாரின் ஜனாஸா தொழுகை 3.1.2009 சனிக்கிழமை அன்று பிற்பகல் 2 மணியளவில் சாத்தான்குளம் பள்ளிவாயிலில் நடத்தப்பட்டு அங்குள்ள ஜமாஅத் கபருஸ்தானில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

அன்னாருக்கு எல்லாம்வல்ல இறைவன் மன்னிப்பையும் சொர்க்கத்தில் மேலான இடத்தையும் அளிப்பானாக. அன்னாருடைய பிரிவால் வாடும் குடும்பத்தினருக்கும் உற்றார் உறவினருக்கும் இந்த பேரிழப்பை தாங்கிக் கொள்ளக் கூடிய வலிமையையும் பொறுமையையும் இறைவன் தந்தருள்வானாக. ஆமின்.

சென்ற இதழ் தொடர்ச்சி...

## அஹ்மதிய்யா ஜமாஅத் பற்றிய

# ஆட்சேபணைகளுக்கு பதில்

**மவ்லானா முஹம்மது உமர் H.A.**

**நாஸிர் இஸ்லாஹ்-வ-இர்ஷாது, காதியான்**

**நபிகள் நாயகம் காத்தமுன்னபிய்யீன்**

ஹஸ்ரத் முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) கடைசி நபியென்று அஹ்மதிகள் ஏற்றுக் கொள்ளாத காரணத்தால் அவர்கள் கொடும் காஃபிர்களென்று அலாவுதீன் தனது நச்சுப் பிரசுரத்தில் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் திருக்குர்ஆனில் எங்கேயுமே எம்பெருமானார் (ஸல்) கடைசி நபியென்றும் அன்னாருக்குப் பிறகு எந்த ஒரு நபியும் தோன்ற மாட்டார் என்றும் குறிப்பிடப்படவில்லை. திருக்குர்ஆனிலிருந்தும் இதனை நிரூபிக்கும் எந்தவொரு திருமறை வசனத்தையும் எவராலும் எடுத்துக்காட்ட முடியாது. ஆனால் திருக்குர்ஆனில் ஒரே ஓர் இடத்தில் காத்தமுன்நபிய்யீன் என்ற சொல் வந்திருக்கிறது. அதற்கு இறுதி நபியென்ற பொருள் அல்லவென்றும், திரு நபியின் உம்மத்தைச் சார்ந்த அன்னாருடைய ஷரீஅத்திற்குட்பட்ட நபி வரலாம் என்றும் நிரூபித்து காட்டும் பல வசனங்களும் திருக்குர்ஆனில் இருக்கின்றதென்றும் இங்கு விளக்குகின்றோம். அதற்குமுன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை நாங்கள் மற்ற எவரையும் விட ஊக்கத்துடன் காத்முன்நபிய்யின் என்று நம்புகிறோம் என்பதற்கு ஹஸ்ரத் அஹ்மத் (அலை) அவர்களுடைய கூற்றை தருகிறோம். அவர்கள் கூறுகிறார்கள்:

''நாயகம் (ஸல்) அவர்களை நாங்கள் காத்தமுன்நபிய்யீன் என்று நம்புவதில்லை என என்மீதும் என் ஜமாஅத்தின் மீதும் குற்றம் சாட்டப்படுகின்றது. எத்தகு திடநம்பிக்கையுடனும் ஆத்மீக ஞானத்துடனும் அந்தரங்க உணர்ச்சியுடனும் நாங்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை காத்தமுல் அன்பியா என்றும் நம்பி உண்மைப்படுத்துகிறோமோ அதில் லட்சத்தில் ஒரு பகுதி கூட இந்த ஆட்சேபணை எழுப்புபவர்கள் நம்புவதில்லை.''(அல்ஹக்கம் பத்திரிகை 17.3.1905)

இதில் வேடிக்கையான விஷயம் என்னவென்றால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இறுதி நபி, அன்னாருக்குப் பிறகு எந்த நபியும் வரமாட்டார் என்று கூறும் அதே மூச்சில் 2000 வருடங்களுக்கு முன், இஸ்ரவேலர்களுக்காக மட்டும் தோன்றிய ஈஸா நபி வருவார் என்று இவர்கள் கூறுகின்றார்கள். ஒன்று மற்றொன்றுக்கு முரண்பட்ட இந்த நம்பிக்கை ஏளனத்திற்குரியதாக இருக்கின்றது.

காத்தமுன் நபிய்யீன் எனும் ஆயத்தைப் பற்றி சற்று விளக்கமாக இங்கு கூற கடமைப்பட்டு ள்ளோம். அல்லாஹ் கூறுகிறான்:- முஹம்மத் (ஸல்) அவர்கள் உங்களிலுள்ள ஆண்கள் எவருக்கும் தந்தையாக இல்லை. எனினும் அவர் அல்லாஹ்வின் தூதரும் நபிமார்ளின் முத்திரையுமாக விளங்குகிறார். (33:41)

இந்த ஆயத்தில் கூறப்பட்ட காத்தம் என்ற சொல் உண்மையில் முத்திரை என்றே பொருள்படும். உலக வழக்கில் முத்திரையை உபயோகிப்பது ஒன்றை உறுதிப்படுத்துவதற்கே யொழிய அது முடிந்து விட்டது என்று காட்டுவதற்கல்ல. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சில அரசர்களுக்கு கடிதங்கள் அனுப்பியபோது அதில் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் என்ற முத்திரையை இட்டிருந்தார்கள். இது எம்பெருமானார் (ஸல்) தான் இக்கடிதங்களை எழுதியவர் என்று உறுதிப் படுத்துவதற்கேயன்றி கடைசி கடிதம் என்று காட்டுவதற்கல்ல.

முந்தைய நபிமார்கள் உண்மையாளர்கள் என்பதை உறுதிப்படுத்தும் முத்திரையாக முஹம்மத் நபி (ஸல்) திகழ்கிறார்கள் என்று நபிமார்களின் முத்திரை என்ற சொற்றொடருக்கு விளக்கமாகும். அதோடு மட்டுமல்லாமல் அவர்களுக்குப் பிறகு தோன்றவிருக்கின்ற நபிமார்களும் அவர் மூலமாகவே உண்மைப் படுத்தப்படுவார்கள் என்ற கருத்தும் இதில்

இருக்கிறது. அதாவது எம்பெருமானாருடைய சாட்சி முத்திரையில்லாமலோ, புதிய ஷரீஅத்துடனோ இனிமேல் எந்தவொரு நபியும் தோன்ற மாட்டார்.

ஹஸ்ரத் அஹ்மத் (அலை) தமக்குக் கிடைத்த நபித்துவ பட்டத்தின் உண்மையைப்பற்றி கூறுகிறார்கள்:

''நான் நபிகள் நாயகத்தின் உம்மத்தல்லாமலும் அவர்களை பின்பற்றாமலும் இருந்திருந்தால் உலகிலுள்ள அனைத்து மலைகளின் அளவுக்கு எனது செயல்கள் இருந்திருந்தாலும் இறைவன் என்னுடன் உரையாடும் சிறப்பு ஒருபோதும் எனக்கு கிடைத்திருக்காது. ஏனென்றால் தற்போது முஹம்மதிய்ய நுபுவ்வத்தைத் தவிர ஏனைய எல்லா நுபுவ்வத்துகளும் நிறுத்தப்பட்டுள்ளன. ஷரீஅத்துடைய ஒரு நபியும் இனி வரவே மாட்டார். ஷரீஅத்தில்லாத நபி வரலாம். ஆனால் அவர் முதலில் ஓர் உம்மத்தியாக இருக்க வேண்டும். இதன் அடிப்படையில் நான் உம்மத்தியாகவும் நபியாகவும் இருக்கிறேன்''. (தஜல்லியாத்தே இலாஹிய்யா பக்கம் 24,25)

காத்தம் என்ற சொல்லிற்குத் தலை சிறந்தவர் என்ற பொருளே அரபி மொழி வழக்கின்படி அளிக்கப்பட்டு வருகிறது. மொழி வழக்கிலுள்ள சொற்றொடர்கள் இதற்குச் சான்றாகும். உதாரணமாக,

காத்தமுல் அவ்லியா (வலிமார்களுக்கு காதம்) காத்தமுஷ்ஷுஅரா (கவிஞர்களுக்குக் காத்தம்) காத்தமுல் முஃபஸ்ஸிரீன் (திருக்குர்ஆன் விளக்கவுரையாளர்களுக்கு காத்தம்) காத்தமுல் முஹத்தஸீன் (முஹத்தஸீன்களுக்கு காத்தம்) காத்தமுல் முஹாஜிரின் (முஹாஜிரீன்களுக்கு காத்தம்)

இவ்வாறு ஏராளமான சொற்றொடர்கள் இதற்கு சான்றுகளாகும். அரபி அகராதியின்படி பன்மையுடன் காத்தம் என்ற சொல் வந்தால் அதற்குச் சிறந்தவர் என்ற பொருளைத் தவிர வேறு பொருள் தர இயலாது.

ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களை நோக்கி ஹஸ்ரத் நபிகள் நாயகம் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்:

''அன காத்தமுல் அன்பியாயி வ அன்த்த யாஅலிய்யு காத்தமுல் அவ்லியாயி. (தைலமி, தஃப்ஸீருஸ்ஸாஃபி) நான் காத்தமுல் அன்பியாவாக இருக்கிறேன். அலியே! நீர் காத்தமுல் அவ்லியாவாக இருக்கிறீர்.''

இங்கும் காத்தமுல் அவ்லியா என்றால் வலிமார்களின் இறுதியானவர் என்று பொருள் தர முடியாது. ஏனெனில் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களுக்குப் பின் பல வலிமார்கள் தோன்றியும் ஒப்புக் கொள்ளப்பட்டும் இருக்கிறார்கள். ஆகவே இங்கு கூறப்பட்ட காத்தமுல் அவ்லியா என்ற சொற்றொடருக்கு வலிமார்களில் சிறந்தவர் என்ற பொருள்தான் இருக்கிறது. அதேபோன்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றி இந்த ஹதீதில் காணப்படும் காத்தமுல் அன்பியா என்பதற்கும் நபிமார்களில் சிறந்தவர் என்றே பொருள் தரவேண்டும். ஹஸ்ரத் முஹம்மத் நபி (ஸல்) அவர்களே காத்தமுன்நபிய்யின் என்ற வார்த்தைக்கு விளக்கமளித்தவாறு இவ்வாறு கூறுகிறார்கள்.

**அன ஸய்யிதுல் அவ்வலீனவல்**
**ஆஹரீன மினந்நபிய்யீன்**

நான் நபிமார்களில் இதுவரை வந்தவருக்கும் இனி வரவிருக்கின்றோருக்கும் தலைவனாக இருக்கிறேன்.

நீங்கள் மார்க்கத்தை ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடமிருந்து கற்றுக் கொள்ளுங்கள் என்று மார்க்க அறிவிற்கான நற்சாட்சியை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து பெற்ற ஹஸ்ரத்ஆயிஷா (ரலி) அவர்கள், காத்தமுன் நபிய்யின் என்ற வாக்கியத்திற்கு என்ன பொருள் தந்திருக்கிறார்கள் என்பதைப் பார்ப்போம். அவர்கள் கூறுகிறார்கள்:

கூலூ இன்னாஹூ காத்தமுல் அன்பியாயி வாலாதகூலூ லாநபிய்ய பஅதஹூ

''நீங்கள் நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றி காத்தமுல் அன்பியா என்று கூறுங்கள். அவர்களுக்கு பிறகு ஒரு நபியும் இல்லை என்று கூறாதீர்கள்.'' (தக்மிலா பக்கம் 85, துர்ரேமன்சூர் பாகம் 5 பக்கம் 20)

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் மார்க்க அறிவிலும் ஹதீதுகளை அறிவிப்பதிலும் உயர்ந்த இடத்தைப் பெற்றுள்ளார்கள். அத்தகைய ஒரு மார்க்கமேதை காத்தமுன்நபிய்யீன் என்ற

வாக்கியத்தின் பொருளை உணர்ந்து அது நபிமார்களின் இறுதி என்ற பொருள் படாது என்பதை திட்ட வட்டமாக தெளிவு படுத்துகிறார்கள்.

அஹ்மதிகள் மட்டுமல்லாமல் ஏராளமான ஸலஃபுஸ் ஸாலிஹீன்களும் இமாம்களும் ஏனைய மார்க்க அறிஞர்களும் காத்தமுன்நபிய்யின் என்ற வாக்கியத்திற்கு அஹ்மதிய்யா ஜமாஅத் கொடுத்து வரும் விளக்கத்தையும் அர்த்தத்தையும்தான் கொடுத்துவருகிறார்கள். சிலவற்றை இங்கு தருகின்றோம்.

**1. ஹனஃபி மத்ஹபின் இமாமான ஹஸ்ரத் முல்லா அலிய்யுல்காரீ கூறியுள்ளார்:**

''காத்தமுன் நபிய்யீன் என்பதன் பொருள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு அந்நாருடைய மார்க்கத்தை பலவீனப் படுத்தும் வகையிலும் உம்மத்தே இல்லாமல் செய்யக் கூடும் வகையிலும் புதிய வாதத்தையுடைய ஒரு நபியும் வரமாட்டார் என்பது மட்டுமே''. (அல்மௌளூஆத் பக்கம்: 59)

**2. ஹஸ்ரத் ஷாஹ் வலியுல்லாஹ் முஹத்தஸ் தஹ்லவி கூறுகிறார்கள்:**

''நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலமாக நபிமார்கள் முத்திரை செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதன் பொருள் இறைவன் மனித இனத்திற்காக ஒரு புதிய ஷரீஅத்துடன் ஒரு நபியையும் அனுப்பமாட்டான் என்பது மட்டுமே.'' (தஃப்ஹீமாத்தே இலாஹிய்யா பாகம் 2, பக்கம் 72)

**3. ஹஸ்ரத் ஸையத் அப்துல்காதிர் ஜீலானி (ரஹ்) கூறுகிறார்கள்:**

''நபிகள் நாயகத்திற்குப் பிறகு புதிய சட்டதிட்டங்களோடு-ஷரீஅத்தோடு நபி தோன்றுவது முற்றுப்பெற்றிருக்கிறது. அதனால்தான் நபிபெருமானார் அவர்களை காத்தமுன் நபிய்யீன் என்று கூறப்பட்டுள்ளது.'' (அல்இன்ஸானுல் காமில் பாகம்1, பக்கம் 98)

**4. ஹஸ்ரத் இமாம் ராஸீ (ரஹ்) கூறுகிறார்கள்:**

''மனித சுகபாவங்களில் காத்தமாக (சிறப்பாக) விளங்குவது அவனது மூளையாகும். நமது ரஸூல் கரீம் (ஸல்) காத்தமுன் நபிய்யீன் ஆனதால் எல்லா நபிமார்களைவிட சிறப்பானவர்களாகத் திகழ்கிறார்கள். மனிதன் ஏனைய படைப்பினங்களில் காத்தம் ஆனதனால் அவன் ஏனையவைகளை விட சிறப்பான படைப்பினமாகின்றான்.'' (தஃப்ஸீர் கபீர் பாகம் 6 பக்கம் 31)

**5. அல்லாமா இப்னு குல்தூன் எழுது கிறார்கள்:**

''நுபுவ்வத்தில் முழுமைத் தன்மை கிடைக்கப்பெற்றதனால் அண்ணல் நபி பெருமானார் (ஸல்) காத்தமுன்நபிய்யின் ஆக இருப்பது போல் விலாயத்தில் முழுமைத் தன்மை அடைபவரை காத்தமுல்அவ்லியா என்று கூறப்படுகின்றது.'' (முகத்தமா இப்னி குல்தூம் பக்கம் : 271)

இவ்வாறு ஏராளமான மார்க்க அறிஞர்கள் காத்தமுன் நபிய்யீன் என்ற சொற்றொடருக்கு மிகவும் தெளிவான விளக்கம் கொடுக்கும்போது இறுதி நபி என்ற குறுகிய பொருளை எவ்வாறு காத்தமுன் நபிய்யீன் என்ற வாக்கியத்திற்கு கொடுக்க முடியும்?

அலாவுதீன் தனது கட்டுரையில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றி பலமுறை இறுதி நபி, இறுதி நபி என்று குறிப்பிட்டுக் கொண்டிருந்தார், ஷரீஅத்துப் பாதுகாப்புப் பேரவையின் தலைவர் என்று தன்னைப்பற்றி அகங்காரம் கொள்ளும் அலாவுத்தீன் தனது கட்டுரையில் இறுதி நபிக்கொள்கைக்கு ஆதாரமாக ஒரு திருக்குர்ஆன் வசனமோ, சுன்னத்தோ ஹதீஸோ எதுவும் குறிப்பிடவில்லை. ஷரீஅத் என்பது திருக்குர்ஆன், சுன்னத், ஹதீஸ் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டதாகும் என்ற உண்மை கூட அவருக்குத் தெரியாமற் போய் விட்டது. அவர் தனது கட்டுரையில் பொய்யிற்கும் ஏச்சிற்கும்தான் முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார்.

புனித திருக்குர்ஆனை ஆராயும்போது, அதில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உம்மத்தில், அன்னாரைப் பின்பற்றுபவர்களிலிருந்தும் நபிமார்கள் தோன்றலாம் என்பதற்கான சாற்றுகள் காணக்கிடக்கின்றன. அவற்றில் ஒன்றிரண்டை மட்டும் இங்கு தருகின்றோம்.

சிலர் நம்மிடம் குர்ஆன் இருக்கின்றது. அதுவே நமக்கு வழிகாட்டியாகப் போதும். ஆகையால் எந்த ஒரு நபியும் தோன்றும் அவசியம் தங்களுக்கு இல்லை என்று கூறுகின்றார்கள். இத்தகையோர் திருக்குர்ஆனை தங்களது வழிகாட்டியாகவும் இமாமாகவும் வார்த்தைகளளவில் கூறுகிறார்களே யொழிய அதன் போதனைகளை எடுத்து நடப்பவர்களல்ல.

திருக்குர்ஆன் 57 ஆம் அதிகாரம் 17,18 வசனங்களில் வருவதாவது :

''ஈமான் கொண்டவர்களுக்கு அவர்களின் இதயங்கள் அல்லாஹ்வை நினைத்தும் அவன் இறக்கிய சத்தியத்தைக் கவனித்து அஞ்சவும் அவர்களுக்குமுன் வேதம் கொடுக்கப்பட்டவர் களைப் போல் ஆகாமலிருக்கவும் கூடிய காலம் இன்னும் வரவில்லையா? அவ்வேதம் கொடுக்கப்பட்டவர்களில் ஒரு நீண்டகாலம் சென்றதற்குப் பிறகு அவர்களுடைய இதயங்கள் கடினமாகிவிட்டன. அவர்களில் பெரும்பாலோர் வரம்புமீறி நடக்கின்றவர்களாயிருந்தார்கள். நிச்சயமாக அல்லாஹ் பூமியை அதன் மரணத்திற்குப் பிறகு உயிர்ப்பிக்கின்றான் என்பதை அறிந்து கொள்ளுங்கள். நீங்கள் விளங்கிக் கொள்வதற்காகவே நிச்சயமாக நாம் உங்களுக்கு தெளிவான வசனங்களை விளக்கித் தந்துள்ளோம்'' (57:17,18)

இந்த திருவசனம் முன்னர் வேதம் கொடுக்கப்பட்டவர்களைப்போல் அதாவது தவ்ராத்தைப் பெற்ற யூதர்களைப்போல் இறைவனைப் பயந்து கடின உள்ளத்துடன் வரம்பு மீறி நடப்பவர்களாக ஆகாமலிருக்க இன்னும் நேரம் வரவில்லையா? என்று கேட்கின்றது. இந்த கேள்வியை எழுப்பி நிச்சயமாக அல்லாஹ் பூமியை அதன் மரணத்திற்குப் பிறகு உயிர்ப்பிக்கின்றான் என்று அல்லாஹ் கூறுகின்றான். திருக்குர்ஆனைப் பெற்ற முஸ்லிம்கள் மத்தியிலும் இறைவன் தனது சட்டத்தின்படி தன் தூதரை அனுப்புவான் என்பதையே இந்த இறைவசனம் மிகத் தெளிவாக நமக்கு எடுத்துக் காட்டுகிறது.

சற்று சிந்தனை செய்து பார்க்கவும். திருக்குர் ஆனின் போதனைகளின்படியும் ஹதீஸுகளின் வழிகாட்டுதல்களின்படியும் அவற்றிற்கேற்ப இஸ்லாமிய பண்டிதர்களின் கூற்றுகளின் படியும் இன்றைய முஸ்லிம்கள் இறைவன் நினைத்து அவனை பயந்து வாழ்க்கை நடத்துகின்றார்களா? அல்லது யூதர்களைப்போல் மார்க்கத்தை மறந்து பெயரளவில் நாங்களும் முஸ்லிம்களே என்று வாழ்கின்றார்களா? ஈஸா நபி (அலை) அவர்களின் காலத்தில் வாழ்ந்த யூதர்களைப் போன்று வானத்திலிருந்து வரும் எலியாவை எதிர்பார்த்திருப்பதுபோல் வானத்திலிருந்து இறங்கும் ஈஸாநபியை எதிர்பார்த்திருப்பதும் இறையருளான நுபுவ்வத்தை மறுப்பதும் இன்றைய முஸ்லிம்கள் இஸ்லாத்தைவிட்டு வெகுதூரம் போயிவிட்டார்கள் என்பதைக் காட்டும் அடையாளமாகும்.

மக்களில் (முஸ்லிம்களில்) ஒரு காலம் வரும் அப்போது இஸ்லாத்தில் அதன் பெயரும் திருக்குர்ஆனில் அதன் எழுத்துகளும் மட்டுமே எஞ்சியிருக்கும். அவர்களுடைய பள்ளிவாயில்கள் பெரிதாகக் கட்டப்பட்டிருக்கும். அவைகளில் ஹிதாயத் எனும் நேர்வழி இருக்காது. அவர்களுடைய உலமா வானத்தின் கீழ் கெட்டவர்களாக இருப்பார்கள் (மிஷ்காத்) என்ற நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பு இந்த காலத்தில் நிறைவேறியிருக்கிறது. இந்நிலையில் மேற்குறிப்பிட்ட வசனத்தின்படி சீர்கெட்டுப்போன முஸ்லிம்கள் மத்தியில் ஒரு நபி தோன்றுவது அவசியமில்லையா?

இன்றைய முஸ்லிம்கள் மிகவும் சீர்கெட்ட நிலையில் இஸ்லாத்தின் போதனைகளுக்கும் கட்டளைகளுக்கும் எதிராக வாழ்க்கை நடத்துவது பற்றி அலாவுதீனுக்கும் ஏனைய ஆலிம்களுக்கும் ஒரு கவலையுமில்லை. ஆனால் இந்த முஸ்லிம்களை இஸ்லாத்தின் பாதையில் நடக்க வைப்பதற்கு ஓர் இறை தூதர் தோன்றுவதில் தான் இவர்களுக்கு எதிர்ப்பும் காழ்ப்புணர்ச்சியும் இருக்கிறது.

2. நாம் தினமும் தொழுகையில் எத்தனையோ தடவை சூரா ஃபாத்திஹாவை ஓதும்போது இறைவனிடம் இவ்வாறு கேட்கின்றோம்:

''இஹ்தினஸ்ஸிராத்தல் முஸ்தக்கீம்.'' அதாவது இறைவா! நீ எங்களை நேரான வழியில் நடத்துவாயாக. நீ யாருக்கு அருட்கொடை அளித்தாயோ அத்தகையவர்களின் வழியில் (எங்களை நடத்துவாயாக).

இந்த திருமறைவசனம், அருட்கொடை பெற்றவர்களின் வழியில் நம்மை நடத்தி அந்த அருட் கொடைக்கு எம்மையும் உரித்தாக்குமாறு நாம் இறைவனிடம் வேண்டுமாறு அந்த இறைவனே கற்றுத் தரும் பிரார்த்தனையாகும்.

இந்த அருட் கொடை பெற்றவர்கள் யார்? அவர்கள் எவ்வாறு அதனைப் பெறுவார்கள் என்பனவற்றை திருக்குர்ஆனில் அல்லாஹ் விளக்கமாக இவ்வாறு கூறுகிறான்:

''எவர்கள் அல்லாஹ்வுக்கும் இத்தூதருக்கும் (நபிகள் நாயகத்திற்கும்) முழுமையாக கட்டுப்பட்டு நடப்பார்களோ அத்தகையவர்கள் அல்லாஹ் அருட்கொடை அளித்த நபிமார்கள், ஸித்தீக்குகள், ஷஹீதுகள், ஸாலிஹீன்கள் ஆகியோராக இருப்பவர்கள். இது அல்லாஹ் அளித்துள்ள அருட்கொடையாகும். அல்லாஹ் அறிவில் முழுமை பெற்றவனாக இருக்கின்றான். (4:71)

''இறைவனுக்கும் அவனது திருத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களுக்கும் முற்றிலும் கீழ்ப்படிந்து நடப்பவர்களை இறைவன் நபிமார்களாகவும் ஸித்தீகுகளாகவும் ஷஹீதுகளாகவும் ஸாலிஹீன்களாகவும் ஆக்குவான் என்றும் அவர்கள் பெறும் இவ்வுயர் பதவிகள் இறைவன் அளிக்கும் அருட்கொடை களாகும் என்றும் இத்திருவசனம் வெளிப்படுத்துகிறது.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு ஒரு நபியும் தோன்ற முடியாது என்று கூறுவதென்றால் அது மேலே கூறப்பட்ட திருமறைவசனத்திற்கு முரண்பட்டதாகும். ஏனென்றால் 'எங்களை அருட்கெடை பெற்றவர்களின் வழியில் நடத்துவாயாக' என்று ஒவ்வொரு முஸ்லிமும் தினமும் வேண்டுகிறார். இறைவனும் தனக்கும் தனது தூதருக்கும் முழுமையாக கீழ்ப்படிபவர்கள் நபி, ஸித்தீக், ஷஹீத், ஸாலிஹ் என்னும் அருட்கெடைகளை பெற்றுக் கொள்வார்கள் என்று கூறுகின்றான்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு ஒரு நபியும் தோன்ற மாட்டார் என்றால் இந்த வசனத்தில் ஸித்தீக், ஷஹீது, ஸாலிஹ் ஆகிய மூன்று பதவிகளை மட்டுமே குறிப்பிட்டிருக்க வேண்டும். அவ்வாறல்லாமல் இங்கு முதலாவதாக நபிப்பதவியைத்தான் தனது அருட்கொடையாக அல்லாஹ் கூறியிருக்கிறான்.

மேலும் இறைவனுக்கும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கும் முற்றிலும் கீழ்ப்படிந்து நடப்பவர்களுக்கே இந்த ஆத்மீகப் பதவிகள் அளிக்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது. ஆதலால் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை பின் பற்றியவர்கள் மட்டும்தான் இந்த அருட் கொடைக்கு உரியவர்கள். அவர்களிலிருந்து தான் இந்த நான்கு பதவிகளும் பெற்றவர்கள் தோன்ற முடியும்; தோன்ற வேண்டும்.

இக்காலத்தில் வாக்களிக்கப்பட்ட மஸீஹாகவும், மஹ்தியாகவும் தோன்றிய ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் (அலை) அவர்கள்தான் இத்தகைய ஒரு உம்மத்தீ நபி என்று வாதித்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முற்றிலும் கீழ்ப்படிந்ததன் காரணமாகத்தான் தமக்கு இறைவன் இந்த மிகப் பெரிய பதவியை தந்தருளியுள்ளான் என்று கூறினார்கள்.

இதனைப் பற்றி ஹஸ்ரத் அஹ்மத் (அலை) அவர்களின் விளக்கத்தை மேலே குறிப்பிட்டுள்ளோம்.

சுருங்கக் கூறுமிடத்து ஹஸ்ரத் நபிகள் நாயகத்தைப் பின்பற்றி ஒரு நபியும் இனி தோன்ற மாட்டார்கள். எம்பெருமானார் எல்லா வகையிலும் இறுதி நபியாக இருக்கின்றார்கள் என்று நிரூபித்து காட்டும் ஒரு வசனமாவது திருக்குர்ஆனிலிருந்து எவராலும் எடுத்துக் காட்ட முடியாது என்று ஆணித்தரமாக கூறுகின்றோம்.

**Parveen Enterprises**
Dealers : Papers, Boards &
Binding Materials
Vadapalani, Chennai 600 026.

**M.Rafique & Sons**
Exporters And Agents
U55, 9th St, Anna Nagar, Chennai-40.
Ph : 2628 1531, Fax : 2628 1532

**NABI VAZHI** Tamil Monthly January 2009

Registered with the Registrar of News Paper of India at No.TN/TAM/05/15211

# நாற்பது நபி மொழிகள்

**(தொடர் : 7)**

**ஹதீஸ் எண் 31: லா வஸிய்யத்த லி வாரிஸின்**

**பொருள்:** வாரிசுக்கு உயில் எழுதுவது தடுக்கப்பட்டுள்ளது.

**விளக்கம்:** அதாவது ஏற்கெனவே ஷரீஅத்தின்படி வாரிசாக இருப்பவர்களாகிய மகன், தந்தை, அல்லது மனைவி போன்றோருக்கு மேலும் அதிகமாக உயில் எழுதுவது தடுக்கப்பட்டதாகும். எவருக்கு ஷரீஅத் பங்கை நிர்ணயித்துள்ளதோ அவருக்கு வாரிசுரிமையை விட அதிகமாக வஸிய்யத் (உயில்) எழுதுவது ஆகுமானதல்ல. ஆயினும், சகோதரன், சகோதரி, பேரன் போன்றோருக்கு சொத்தில் 3-ல் ஒரு பகுதியிலிருந்து வஸிய்யத் (உயில்) எழுதலாம்.

**ஹதீஸ் எண் 32: லா தவுத் ஃபீ சதகதிக்க**

**பொருள்:** நீங்கள் தருமமாக கொடுத்ததை திரும்பி வாங்காதீர்கள்.

**விளக்கம்:** ஒருமுறை தருமமாகக் கொடுக்கப்பட்ட ஒரு பொருளை திருப்பி வாங்குவது -ஏன்- விலை கொடுத்து வாங்குவது கூட தடுக்கப்பட்டதாகும். ஆயினும் வேறொருவர் தருமமாகக் கொடுத்திருக்கும் போது, அதை வாங்குபவர் அந்த தருமத்தை தருமம் வழங்கியவரைத் தவிர மற்றவருக்கு அன்பளிப்பாகக் கொடுக்கலாம்.

**ஹதீஸ் எண் 33: அந்நதமு தவ்பத்துன்**

**பொருள்:** பாவத்தின் மீது வெட்கப்படுவதே உண்மையான தவ்பா (பாவமன்னிப்புக் கோருதல்) ஆகும்.

**விளக்கம்:** வெட்கம் ஏற்படாதவரை பாவத்தின் மீது சொல்லளவில் தவ்பா செய்வது ஒன்றுமல்ல.

**ஹதீஸ் எண் 34: இஜ்தனிபூ குல்ல முஸ்கிரின்**

**பொருள்:** போதையை உருவாக்கும் ஒவ்வொரு பொருளிலிருந்தும் தப்பித்துக் கொள்ளுங்கள்.

**விளக்கம்:** ஏனெனில் ஒவ்வொரு போதைப் பழக்கமும் உடல் நலத்திற்கு கெடுதியையும், பழக்கத்திற்கு அடிமையையும், அறிவுக்கு கெடுதலையும் உருவாக்குகின்றது.

**ஹதீஸ் எண் 35: லா ததமன்னவுல் மவ்த்த**

**பொருள்:** மரணத்திற்கு ஆசைப்படாதீர்கள்.

**விளக்கம்:** ஏனெனில் மரணத்திற்கு பிறகு செயல்களுக்கான தொடர் முடிந்து விடுகின்றது. மேலும் மரணத்திற்கு ஆசைப்பட்டு, ஆசைப்பட்டு கடைசியில் தற்கொலைக்கான சிந்தனைகளே உருவாகும் சாத்தியக் கூறு இருக்கின்றது. மரணத்திற்கு ஆசைப்படுதல் என்பதன் ஒரு பொருள், அப்படிப்பட்ட நபர், இறைவனின் உலக அருட்கொடைகளை மறுக்கின்றார்; இங்கு என்மீது இறைவனுடைய அருள் எதுவுமில்லை எனக் கருதுகின்றார் என்பதுமாகும்.

If undelivered please return to:

முகவரி : நிர்வாகி - **நபி வழி**

**அஹ்மதிய்யா முஸ்லிம் மிஷன்**

11, முதல் பிரதான சாலை, யு.ஐ. காலனி,
கோடம்பாக்கம்,சென்னை-24. Ph : 24817174

Printed & Published By : **K. NASIR AHMED**
From: No.11, First Main Road, U.I. Colony, Kodambakkam, Chennai-24. Ph : 2481 7174.
Editor : **O.M. MUZZAMMIL AHMAD**.
Printed at : **Script Printers**, Periyar Pathai Choolaimedu, Chennai - 600094.